உ

சிவமயம்

# சைவக்கிரியைவிளக்கம்.

இது

யாழ்ப்பாணம் விக்ரோறியாக் கலாசாலை

தலைமையாசிரியர்

புலோலி

சு. சிவபாதசுந்தரம் B. A.

செய்தது.

யாழ்ப்பாணம்

தையல்நாயகி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இரத்தாட்சி௵ மாசி௴

மந்திரமதனிற்பஞ்சமந்திரம்வடிவமாகத்
தந்திரஞ்சொன்னவாறிங்கென்னெனிற்சாற்றக்கேணீ
முந்திபதோற்றத்தாலுமந்திரமூலத்தாலு
மந்தமில்சத்தியாதிக்கிசைத்தலுமாகுமன்றே.

என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தங்களிற் கூறப்பட்டது. மந்திரசத்தியினளவு மனமொழிகட்கப்பாற்பட்டது. அதன்பெருமை தேவாரங்களிலொருவாறு விளக்கப்படும்.

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழல்
உண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே.

ஆயினும் அதன்பயன் அதை யுபாசிக்குமளவுக்குத் தக்க தாகவே பெறப்படும். சிவோகம்பாவனையுங் கருடபா வனையும் பெரும்பயன் பயத்தலும் சண்டேசுரராற் சிவலிங்க மாகப்பாவிக்கப்பட்ட மணற்குவியல் பேரருள்சுரத்தலும் பாவனையினாற்றலையும் பாவனையும் மந்திரமும் ஒன்றற் கொன்றின்றியமையாமையையு முணர்த்தும்.

கிரியை செய்யுங்கால் அதிலே மனப்பதிவு மன்பும் அத்தியாவசியமாம். இவற்றைப் பெறுதற்கு அதன் றன்மையும் நோக்கமுங் கிரியை செய்வோனுக்குப் புலப் படல்வேண்டுமாதலால், இவற்றைவிளக்குமொரு நூல் வேண்டப்படுகின்றது இத்தகைய ஒரு நூலியற்றுதற்கு வேண்டிய அறிவின்றி இதனையெழுதத் தொடங்கிய குற்றத்தை நோக்கநலங்கருதிப் பெரியோர் மன்னிப்பர். கிரியைகளை விளங்கற்குச் சைவசமயவுணர்ச்சி வேண்டு மாதலால், இந்நூலின் முதலியல் சைவசமயவியலாயிற்று.

சில கிரியைப்பகுதிகள் பல கிரியைகளில் வருதலால், ஒவ்வொரு கிரியைப்பகுதியையும் ஒவ்வொரு கிரியையினும் விளக்காது, கிரியையுறுப்புகள்யாவும் இரண்டாமியலிற் றனித்தனியே கூறப்பட்டன. பின்பு, பூர்வக்கிரியைகளாகிய தீட்சையும் விவாகமும், தனக்கும் பிறர்க்குமுரியதாகிய சிவாலயபூசாதிகளும், அபரக்கிரியையும் முறையே நான்கியலிற் கூறப்பட்டன.

இந்நூல்செய்தற்குப் பெருந்துணையானவை காமிகம் சுப்பிரபேதம் காரணம் வாதுளமாகிய ஆகமங்களும் அகோரசிவர்பத்ததியும் சித்தாந்தசாராவலியுமாம். வடமொழியறிவுக் குறைவுண்மையால் மொழிபெயர்ப்போடுள்ள ஆகமபத்ததிகளே பெரிதும் பயன்பட்டன. இம்முயற்சியிலுதவிபுரிந்த சைவாசாரியருள், ஆகமவறிவிற் சிறந்தவரும் புலோலிப்பசுபதீசுராலயத் தலைமையாசாரியருமாகிய ஸ்ரீமத் செ. இராமலிங்கக்குருக்களவர்களும் அருளாளரும் இவ்வித்தியாலயச் சிவார்ச்சகருமாகிய ஸ்ரீமத் சி. சரவணபவக்குருக்களவர்களுஞ் செய்த நன்றி பாராட்டப்படத்தக்கது.

இதிலுள்ள குற்றங்களை யெடுத்துக்காட்டுதல் பெரியோர் கடனாம்.

யாழ்ப்பாணம்<br>பரமேசுவர மகாவித்தியாலயம்<br>ருத்ரோற்காரி௵ பங்குனி௴

சு. சிவபாதசுந்தரம்

# இயன்முறை.


| | | பக்கம் |
|---|---|---|
| க. | சைவசமயவியல் | க |
| உ. | கிரியையுறுப்பியல் | எ |
| ங. | தீட்சையியல் | உரு |
| ச. | விவாகவியல் | ஙகூ |
| ரு. | கோயிலியல் | சரு |
| சு. | அபரக்கிரியையியல் | சுங |

உ

சிவமயம்.

# சைவக்கிரியைவிளக்கம்.

———:։———

## க. சைவசமயவியல்.

கடவுள். கடவுள் ஒருவரே. அவர் சிவமெனப்படுவர். அவர் எங்களுடைய மனதுக்கெட்டாதவர். அவர் வடிவம் முதலியவற்றிற்கு அப்பாற்பட்டவர். அவரை அவருடைய திருவருட்செயல்களினால் ஒருவாறு அறியலாம்.

திருப்பெயர்கள் — திருவருட்சத்திக்கு உமாதேவி என்று பெயர். உமாதேவிக்கு இலக்குமி சரசுவதியென்ற பெயர்களுமுண்டு. சிவபெருமான் சத்தியினாற் பலவேறு தொழில்களைச்செய்வர், வெவ்வேறு தொழில்செய்தலினால் வெவ்வேறு பெயர் உண்டு. படைத்தல், காத்தல் அழித்தலாகிய மூன்றையுஞ்செய்யும்போது பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்ற பெயர்கள் உண்டு. அவற்றைச்செய்யும் சத்திகளுக்கு ஜனனி, ரோதயித்திரி * ஆரிணி என்று பெயர். உயிர்களுக்கு அறிவைக்கொடுக்குஞ்சத்திக்கு ஞானசத்தி ‡ யென்று பெயர். முத்தொழிலுஞ்செய்யுஞ் சத்திக்குக் கிரியாசத்தி ‡ யென்று பெயர். பிரபஞ்சத்தை ஆளும் சத்திக்கு இச்சாசத்தி ‡ யென்று

---

* இந்த மூன்று சத்திகளுஞ் சூலத்தின் கவர்களாற் குறிக்கப்படும். (வாதுளம்) ‡ இந்த மூன்று சத்திகளுஞ் சிவபெருமானுடைய கண்களாகிய சந்திரன் சூரியன் அக்கினியாகியவற்றாற் குறிக்கப்படும். (காமிகம்.)

பெயர். பிரபஞ்சத்துக்கு மூலமாகிய மகாமாயைக்குத் தலைவராயிருப்பதாற் சிவபெருமானுக்கு விநாயகரென்று பெயர். குருவாயிருந்து மெய்யறிவையூட்டுதலாற் தக்ஷிணாமூர்த்தியென்றும் சுப்பிரமணியமூர்த்தியென்றும் பெயர். உலகத்தைக்காக்கும் சத்தி பத்து மூர்த்திகளையுடையது. மேற்பக்கத்தைக்காக்கும்போது * பிரமாவென்றும் கீழ்ப்பக்கத்தைக்காக்கும்போது விஷ்ணுவென்றும் கிழக்கு முதல் எட்டுத்திக்குகளையும் காக்கும்போது இந்திரன் அக்கினி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் என்றும் பெயர். இந்த மூர்த்தங்கள் உலகபாலகரெனப்படுவர். இவர்களுக்கு ஆயுதமென்று சொல்லப்படுவனவும் அவருடைய சத்தியின் ரூபங்களே. அவையாவன: முறையே, பதுமம் சக்கரம் வச்சிரம் சத்தி தண்டம் வாள் பாசம் அவசம் கதை சூலம் என்பன. இவைகள் தசாயுதம். (தச = ௧௦). வைரவர் வீரபத்திரர் முதலியனவும் சிவபெருமானுக்குள்ள பெயர்களே. பெயர்கள் பலவாயினும் கடவுள் ஒருவரே. "ஒருவர் தாம்பலபேருளர்காண்மினே" என்றார் திருநாவுக்கரசுநாயனார்.

சிவமூர்த்தங்கள்—கடவுள் உருவமில்லாதவராயினும் அவரை நினைத்தற்காகவும் வணங்குதற்காகவும் உருவஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உருவத்தின் பகுதிகள் அவருடைய தன்மைகளையே குறிப்பன. அவர் ஐந்துமுகமுடையவராகத் தியானிக்கப்படும்போது அம்முகங்களுக்கு ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமதேவம்

* பிரமா விஷ்ணு இந்திரன் என்னும் பெயர்களையுடைய ஆன்மாக்களும் உண்டு.

சத்யோசாதம் என்று பெயர். இவைகள் முறையே அருளல் மறைத்தல் அழித்தல் காத்தல் படைத்தல் ஆகியவற்றைச்செய்யும் திருவருளைக்குறிக்கும். இருதயம் மெய்ப்பொருளாதலையும், சிரசு நித்தியானந்தத்தையும், சிகை (முடி) ஆன்மாக்களை வசப்படுத்துஞ் சத்தியையும், கவசம் இரட்சிக்கும் சத்தியையும், நேத்திரம் (கண்) செகத்துக்குக்காரணமாயிருக்கும் சத்தியையும், அத்திரம் பொய்யறிவைநீக்கும் சத்தியையும் குறிப்பன. ஐந்து முகங்களும் பஞ்சப்பிரமம் என்றும் ஆறு அங்கங்களும் ஷடங்கமென்றும் பெயர்பெறும் (பஞ்ச = ஐந்து; ஷட் = ஆறு.) ஆன்மாக்கள் சிவஞானத்தைப்பெற்று சிவத்தன்மையையடைந்து சிவபெருமானையறியும்வரைக்கும் அருள்வடிவங்களையே பூசிக்கவும் தியானிக்கவும் வேண்டும்.

கடவுளின்மந்திரங்கள்—எவற்றினும் மேலானதாகிய மூலமந்திரம் ஐந்தெழுத்தெனப்படும். ஐந்துமுகங்களினுடைய பெயர் சார்ந்தமந்திரங்கள் பிரமமந்திரங்கள். ஆறு அங்கங்கள் சார்ந்தவை அங்கமந்திரங்கள். இப் பதினொரு மந்திரங்களும் சங்கிதைமந்திரமெனப்படும். (சங்கிதை = தொடுத்துவருவன.) இவைகள் எழுவகை முடிபுகளையுடையன:—நம:, ஸ்வதா, ஸ்வாஹா, பட், வஷட், வௌஷட், ஹூம்.

ஆன்மாக்கள்—ஆன்மாக்கள் பல. அவைகள் என்றுமுள்ளவை. அறியும் வல்லமையுடையன. இயல்பாக மலத்தொடர்புடையவை. சிவபெருமானது திருவருளால் மலப்பற்றினின்றும் நீங்கிச் சிவத்தன்மையை அடையத்

தக்கவை. சிவத்தன்மையையடையமுன் அளவில்லாத பிறவிகளை எடுப்பவை.

மலங்கள்—மலங்கள் ஆணவம் கர்மம் மாயை என்பவை. ஆணவம் பொய்யறிவைக்கொடுப்பது. கர்மம் ஆன்மாக்கள்செய்யும்வினை. மாயை உலக அறிவாகிய சிற்றறிவைக்கொடுப்பது; இதைக்கொண்டு உடம்புகளும் உலகங்களும் கடவுளால் தோற்றுவிக்கப்படும். ஆணவச் செயல்களின்பயனை அனுபவித்தலால் ஆணவம் வலிகுறையும். கடவுளுடைய திருவருள்வழிநின்று செய்வனவற்றால் மெய்யறிவு பொலியும். மாயையிலே சுத்தமாயை அசுத்தமாயையென இருபகுதிகளுண்டு. சுத்தமாயையிலிருந்து தோன்றுஞ் சிவதத்துவங்களைந்தும் ஆன்மாவுக்கு அன்பையும் அறிவையும் வல்லமையையுங்கொடுப்பன. அசுத்தமாயையினின்று வித்தியாதத்துவங்களேழும் ஆத்ம தத்துவங்களிருபத்திநாலும் தோன்றும். வித்தியாதத்துவங்கள் ஆத்மதத்துவங்களை நடத்துவன. மாயையிலிருந்து தூலம் சூக்குமம் காரணம் ஆகிய மூவகையுடம்புகளும் உலகங்களும் ஆக்கப்படும். *

தேவர், அசுரர்—தேவர்களும் அசுரர்களும் மிக்க வல்லமையுள்ள பிறவிகள். ஆயினும் மெய்யறிவினாலுண்டாகும் குணத்தைத் தேவர்களென்றும் பொய்யறிவினால் உண்டாகும் குணத்தை அசுரர் என்றும் உருவகமாகக் கூறுவதுமுண்டு. ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யக்

---

* இரத்தம் தசைமுதலியவற்றால் ஆக்கப்பட்ட உடம்பு தூல உடம்பெனப்படும். மனம் புத்திமுதலியவைகள்சார்ந்த உடம்பு சூக்கும உடம்பு. சிவதத்துவங்கள் சார்ந்துள்ளது காரணவுடம்பு, மாறி மாறி யழிவதும் தோன்றுவதும் தூலவுடம்பே.

கருதும்போது மெய்யறிவு ஒருபக்கமாயும் பொய்யறிவு எதிர்ப்பக்கமாயும் அவனை இழுக்கும். இதைத் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையிலுண்டாகும் போர் என்று சொல்லுவர். *

உருத்திரர்—உருத்திரராவார் உருத்திரனென்னும் சிவமூர்த்தியினது சிறந்த அருளைப்பெற்றவர். அவர்களின் பெயர் மகாதேவர், ஹரர், உருத்திரர், சங்கரர், நீலலோகிதர், ஈசானர், விஜயர், பீமர், தேவதேவர், பவோற்பவர், கபாலீசர் என்பன.

வித்தியேசுவரர்—வித்தியேசுவரராவார் மகேசுவரருடைய சிறந்த திருவருளைப்பெற்றோர். இவர்கள் மந்திரங்களுக்குத் தலைவராதலால் வித்தியேசுவரர் எனப்படுவர். (வித்தை = மந்திரம்.)

அவர்களின் பெயர்: அநந்தர், சூக்ஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஏகருத்ரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி.

---

* சாந்தோக்கியோபநிடதத்திற் கண்டது.

## காலவரையறை.

| | | | |
|---|---|---|---|
| ௬௦ | நாழிகை | = | ஒரு நாள் |
| ௧௫ | நாள் * | = | ஒரு பக்கம் |
| ௩௦ | நாள் * | = | ஒரு மாதம் |
| ௬ | மாதம் | = | ஒரு அயனம் |
| ௨ | அயனம் | = | ஒரு ஆண்டு |
| ௧௭௨௮௦௦௦ | ஆண்டு | = | கிருதயுகம் |
| ௧௨௯௬௦௦௦ | ஆண்டு | = | திரேதாயுகம் |
| ௮௬௪௦௦௦ | ஆண்டு | = | துவாபரயுகம் |
| ௪௩௨௦௦௦ | ஆண்டு | = | கலியுகம் |
| ௪௩௨௦௦௦௦ | ஆண்டு | = | சதுர்யுகம் (சதுர் = நாலு) |
| ௭௧ | சதுர்யுகம் * | = | ஒரு மன்வந்தரம் |
| ௧௪ | மன்வந்தரம் | = | ஒரு கற்பம் |
| | | = | ௧௦௦௦ சதுர்யுகம் |
| ௨ | கற்பம் | = | ஒரு பிரமதினம் |
| ௩௬௦ | பிரமதினம் | = | ஒரு பிரமவருஷம் |
| ௫௦ | வருஷம் | = | ஒரு பரார்த்தம் |
| ௧௦௦ | பிரமவருஷம் | = | ஒரு பிரமகாலம். |

இப்போது நடைபெறுவது இரண்டாவது பரார்த்தத்தில் ஒரு சுவேதவராக கற்பத்தில் ஏழாவதாகிய) வைவசுவத மன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் கலியுகத்தில் முற்பகுதியில் ருதிரோற்காரி வருஷம்.

* முன்பின்.

## உ. கிரியையுறுப்பியல்.

க. விநாயக குருவழிபாடு—உலகங்கள் யாவற்றிற்கும் முதற்காரணமாகியபொருள் மகாமாயை அல்லது பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்குஞ் சிவசத்திக்கு விநாயகர் என்று பெயர். (வி=இல்லாத, நாயகர்=தலைவர். அஃதாவது தமக்குத் தலைவரில்லாதவர், மேலான தலைவரெனப்பொருள்படும்) ஆதலால் எவ்வுலகத்திலேனுஞ்செய்யப்படும் எந்தக்கிரியையும் இனிது முடிதற்கு விநாயகக்கடவுளது திருவருள்வேண்டி முதற் செய்யப்படுங் கிரியை விநாயகவணக்கம். குரு சமய கிரியைகளுக்குத் தலைவராதலாலும், அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்துநிற்றலாலும் குருவையும் வழிபடுவர். (கு=மலம், ரு=நீக்குபவர்)

உ. ஆசமனம்—ஆசமனமாவது மூவகைத்தத்துவங்களையும்* நினைத்து வலக்கைப் பெருவிரலடியிற்பொருந்திய அற்ப தண்ணீரை (உழுந் தமிழ்ந்திய தண்ணீரை) மந்திரத்தோடு ○ மூன்றுமுறை பருகி உதடுகளைப் பெருவிரலடியினால் இருமுறையும் உள்ளங்கையினால் ஒருமுறையுந் துடைத்து மந்திரத்தோடு ‡ உடம்பின் பகுதிகளைத் தொடுதல். மூவகைத் தத்துவங்களை மந்திரத்தோடு நினைத்தலால் அவற்றாலாக்கப்பட்ட உடம்பு அருள் வழிநிற்கும். மந்திரத்தோடு இடங்களைப் பெருவிரலணி

---

* ஆத்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம். மந்திரம் ஆத்மதத்வாயஸ்வதா, வித்யாதத்வாயஸ்வதா, சிவதத்வாயஸ்வதா. ○ அஸ்த்ராயபட். ‡ இருதயாயவௌஷட்.

விரல்களாலே தொடுதலினுல் அவ்வுறுப்புக்களால் வரத்தக்ககுற்றங்களை அவற்றின் அதிதேவதைகள் * நீக்குவர்.

ரு. பிராணுயாமம்—அஃதாவது பிராணவாயுவையடக்குவதினுல் மனதை ஒருவழிப்படுத்தித் திருவருளிலே நிறுத்துதல். (பிராண + ஆயாமம்=பிராணவாயுவை அடக்குதல்.)

இதுசெய்யும் முறைமை:—வலக்கையிற் சுட்டுவிரலையும் நடுவிரலையும் உள்ளே மடக்கிப் பெருவிரலினுல் வலமூக்கைப் பிடித்துக்கொண்டு சங்கிதை மந்திரத்தை உச்சரித்து இடமூக்கால் மூச்சை யிழுத்தபின்பு, பெருவிரலணிவிரல்களால் இரு மூக்குகளையும் பிடித்துக்கொண்டு அம்மந்திரத்தை உச்சரித்து மூச்சையடக்கியும், அணிவிரலால் இடமூக்கைப் பிடித்துக்கொண்டு சங்கிதையை உச்சரித்து மூச்சை வெளியே விடுக. பிராணுயாமமானது பொறிகளையும் மனத்தையும் சுத்திகரித்து அவைகளை அடக்குதற்குத் துணையாகின்றது.

சு. பவித்திரமணிதல்—பவித்திரமாவது மோதிரம் போலத் தர்ப்பையினுற் செய்யப்பட்டு அணிவிரலி லணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யும்போது

---

* தொடுமிடங்களாவன:—முகம், வலமூக்கு, இடமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது, இடக்காது, வயிறு, மார்பு, வலப்புயம், இடப்புயம், தலையாகிய பன்னிரண்டுமாம். முகத்துக்குக் கங்காதேவியும், மூக்குக்குப் பிராணனும், கண்களுக்கு சூரிய சந்திரரும், காதுகளுக்கு லோகபாலகரும், வயிற்றுக்குப் பிரமாவும், மார்புக்கு உருத்திரனும், புயங்களுக்கு அசுவினிதேவரும், தலைக்கு விஷ்ணுவும் அதிதேவர்களாம். காமிகம்.

மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றுங் காத்தல். [பவித்திரம்=பதனாத்த்ராயதே=பாவத்திலே விழுதலினின்றுங் காப்பது. காமிகம்.]

ரு. சங்கற்பம்—சங்கற்பமாவது செய்யப்போகுங் கிரியையிலே மனதைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்ன காலத்திலே இன்ன இடத்திலே இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்பவாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழுஞ் சிருட்டித்தொடக்கத்திலிருந்து அன்றுவரையும் உள்ளகாலம் இதிலே குறிக்கப்படுதலாலே, காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.

சங்கற்பமுறை—ஆண்கள் வலதுகையிலே தருப்பை பூ அரிசி அல்லது எள்ளு முதலியவற்றை வைத்துக்கொண்டு வலதுகையை மேலாகவும் இடதுகையைக் கீழாகவும் வைத்து இடதுபெருவிரலை வலதுபெருவிரலாலமர்த்தி வலதுமுழந்தாளில் வைக்க. பெண்கள் இடமுழந்தாளில் வைக்க.

சங்கற்பவாக்கியத்தின் கருத்து—சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரமாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராககற்பத்தில் வைவஸ்வதமன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தில் முற்பகுதியில் சம்புத்துவீபத்தில் பாரத வருஷத்தில் பாரதகண்டத்தில் மேருவுக்குத் தெற்கே ——— (இடத்தின் பெயர் பிரபவமுதலான அறுபது வருஷத்துள் ——— (இன்ன) வருஷத்தில் ——— (இன்ன) அயனத்தில் ——— (இன்ன) பருவத்தில் ——— (இன்ன)

மாதத்தில் ——— (இன்ன) பட்சத்தில் ——— (இன்ன) திதியில் வாரத்தில் நட்சத்திரத்தில் (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான கரணமுள்ளதாய் விசேஷ குணத்தோடுசேர்ந்த இந்தப்புண்ணிய தினத்தில்* ——— (இன்ன) நோக்கமாக ——— (இன்ன) கிரியை செய்யப்போகிறேன்.

௬. கும்பம்வைத்தல்—கடவுளை லிங்கம் முதலியவற்றிலே வழிபடுவதுபோலக் கும்பத்திலும் வழிபடலாம். கும்பம் உடம்பின் பாவனை. அதிலே சுற்றியசீலை தோலாகும்; நூல் நாடிகள்; குடம் தசை; தண்ணீர் இரத்தம்; அதனுட் போடப்படும் ரத்தினம் எலும்பு; தேங்காய் தலை; மாவிலை தலைமயிர்; தர்ப்பை குடுமி; அதிலே பதிக்கப்பட்ட மந்திரம் உயிர்.†

எ. சகளீகரணம்—சகளீகரணமாவது சரீரத்தைச் சிவரூபமாக்குதல். [சகளம் = (சிவ) சரீரம், கரணம் = செய்தல்.] சிவவடிவத்துக்குரிய சிவமந்திரங்களை எமது சரீரத்திற் பதித்தலாற் சிவவடிவமுண்டாகும். இதில் மூன்றுபடிகளுண்டு. முதலாவது கையைச் சுத்திசெய்தல்

---

* இந்தப்பகுதி சொல்லும்போது ஆசாரியர் கிரியைசெய்வோனை "மம" என்று சொல்லச் சொல்லுவர். (மம = என்னுடைய). அதன்பின் கிரகதோஷம் நீக்குதல் அல்லது தகப்பனுருடைய அந்தியேட்டி முதலியனவரும்.

† கடம்மாம்சந்துவிங்யஸ்ய தோயம்ரக்தமிதிஸ்ம்ருதம்
ரத்நம்அஸ்திசமம்வாபி சூத்ரோநாடிதனைவச
நாலிகேரசிரோயுக்தம் கேசம்சாம்ரபல்லவம்
வஸ்த்ரம்சர்மசிகாகூர்சம் மந்த்ரம்ப்ராணமுதீரித:
சகலாகமசங்கிரகம்.

கரசுத்தியெனப்படும்.○ கையிலே சிவபெருமானைப் பூசித்துச் சிவமந்திரங்களைப் பதித்தல் கரநியாசம்.* அந்தக் கையினாலே உடம்பின் மற்றப்பகுதிகளிற் சிவமந்திரங்களைப் பதித்துச் சிவவடிவமாக்கல் அங்கநியாசம்.†

---

○ கரசுத்தியாவது வலக்கையினால் இடக்கையின் இருபுறத்தையும் இடக்கையினால் வலக்கையின் இருபுறத்தையும் தடவிச் சத்திமந்திரம் உச்சரித்து கைகளைக் குவித்து அத்திருவருளினால் கையைச் சுத்திசெய்தலாம்.

* கரநியாசம்—(கரம் = கையில், நியாசம் = மந்திரத்தைப் பதித்தல்) உள்ளங்கையிலே பெருவிரலினால் சிவாசனமூர்த்திமந்திரங்களைப்பதித்து சுட்டுவிரலாற் பெருவிரலையும், பெருவிரலாற் சுட்டுவிரல்முதலிய மற்றவிரல்களையும் ஈசானம்முதலிய ஐந்துமந்திரங்களை முறையேசொல்லித் தடவுக. உள்ளங்கையிலே சிவனது மந்திரவடிவத்தையும் சிவ[illegible]ரத்தையும் பூசிக்க. சிவமூலமந்திரத்தைப்பதித்து சிறுவிரல்முதற் பெருவிரலீறாக இருதய சிரசிகை கவச அஸ்த்திர மந்திரங்களைப் பதித்துக் கவசத்தால் அவகுண்டனஞ்செய்து மூலமந்திரத்தை உச்சரிக்க. அங்கமந்திரங்களுள் அத்திரம் ஒழிந்த ஐந்தையும் முறையே சிறுவிரல்முதலாக ஐந்துவிரல்களிலும்பதித்துத் தடவுக.

‡ அங்கநியாசம்—பெருவிரலோடுகூடிய அணிவிரலை இருதயத்தில்வைத்துச் சிவமூர்த்தியைப்பூசித்தபின், பெருவிரலாலே தலையையும் அதனோடு சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் சிறுவிரல்களுள் ஒவ்வொன்றை முறையேசேர்த்துத் தலை முகம் மார்பு கொப்பூழ் கால் ஆகிய இடங்களையுந்தொட்டுப் பிரமமந்திரங்களுள் ஒவ்வொன்றை முறையேபதித்துச் சிவ அங்கமாக்கிப் பூசிக்க. இருதயத்திலே திரு ஐந்தெழுத்தைப் பதிக்க. கண்களில் நேத்திரமந்திரத்தையும் இருதயம் சிரசு குடுமி ஆகிய இடங்களைத்தொட்டு அந்த அந்த இடத்துக்குரிய மந்திரத்தையும்பதிக்க. சுட்டுவிரல் இரண்டையும் நெஞ்சுப்பக்கங்களிலே மேல்நோக்கிப்பிடித்துக் கவசமந்திரத்தைப் பதிக்க. இடக்கை அணிவிரலால் வலஉள்ளங்கையிலும் வலக்கை அணிவிரலால் இடஉள்ளங்கையிலும் அஸ்திரமந்திரத்தைப் பதிக்க.

இந்தச் சகளீகரணமாகிய கிரியை சைவசமயத்துக்கு உயிர்போலுள்ளது. கைகளையும் மற்றப் பகுதிகளையும் மந்திரங்களினிடமாகவும் சிவபெருமானது இருப்பிடமாகவுங்கொள்ளுதலினாற் பூசை செய்யும்போதுஞ் செய்த பின்னும் மனம் அருள்வழியிலேயே சென்றுகொண்டிருக்கும். சிவசரீரமாக்கி ஒருவன் தன்னைச் சிவமாகப் பாவிக்கும்போது அவனுக்கு உலகத்திலுள்ள ஒருபொருளிலும் பற்றுவராது. தன்னுடைய சரீரத்திற்கு வரத்தக்க துன்பங்களையும் மதியான். அவனுடைய சரீர உறுப்புக்களும் மனமுஞ் சிவபூசைக்கே துணையாய்நிற்கும். சண்டேசுரநாயனாருக்கு அவருடைய தந்தையார் அடித்தபோது அந்த அடி அவருக்குத் தெரியாததும் இதனாலேயே. ஒருவன் நாள்தோறும் தன்னுடைய சரீரத்தை மந்திரசரீரமாகப் பாவித்துவருவானாயின் இழிவான செய்கைகளுக்கேனும் பாவங்கள் செய்வதற்கேனும் இலகுவில் உடன்படான். மந்திரம்பதிந்த கையினாற் களவு செய்யவேணும் கைக்கூலிவாங்கவேணும் வேறுபாவங்கள் செய்யவேணுந் துணியான். மந்திரம்பொருந்திய வாயினால் தீயசொற்களைச் சொல்லான். சிவபெருமானுடைய ஆசனமாகிய இருதயத்தினாலே தீமைசெய்யுங்கருத்தைக்கொள்ளான். தன்னுடைய சரீரம் சிவசரீரம் என்று நினைக்கிறவன் இழிவான செய்கைகளுக்கேவப்படும்போதும் தன் மகிமையை நினைத்து அவற்றினின்றும் விலகுவான்.

அ. சிவோகம்பாவனை—மந்திரசெபஞ் செய்யமுன் சிவோகம்பாவனை செய்யப்படும். அஃதாவது தன்னைக் கடவுளாகப் பாவித்தல். (சிவ = கடவுள், அகம் = நான், பாவனை = பாவித்தல்) தான் ஆன்மா என்ற கருத்தைவிட்டுத் தனக்கு உயிராகிய சிவமாகத் தன்னைப்பாவித்தல்.

இது நல்லொழுக்கத்துக்கும், உலகப்பற்று நீங்குதற்கும், சிவவசமாதற்கும் பெருந்துணை.

கூ. பூசை—பூசை தொடங்குமுன் ஸ்நானம் முதலியனமுடித்து ஆசமனமும் சகளீகரணமும் செய்க. பின்பு ஆசனத்துக்கும் மூர்த்திக்கும் (= விக்கிரகம்) பூசை செய்து, கடவுளை நினைத்து அந்த மூர்த்தியிலே எதிர்முகப்படுத்தல் ஆவாகனம் எனப்படும். இதன்பின் தாபனம் சந்நிதானம் சந்நிரோதனம் செய்து பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் கொடுத்து பூவைச்சாத்தலாகிய ஏழு கிரியைகள் உண்டு. இவற்றின்மேல் அபிஷேகம் தூப தீபம் அர்ச்சனை தோத்திரம் ஆகிய இவைகள் செய்யப்படும்.

இவற்றுள் ஆசனபூசை மூன்றுவகைப்படும். ஆசனங்களை விரித்துச்சொல்லாமல் ஆசனமென்ற பெயரால் மாத்திரம் பூசிப்பது ஒன்று. இரண்டாவது ஆதாரசத்தி அனந்தர் தர்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் என ஆறாக ஆசனத்தை வகுத்துச்செய்தல். மூன்றாவது இவைகளோடு மற்றைய தத்துவாதிகள் * யாவற்றையும் ஆசனமாகக்கருதிப் பூசித்தல். இவற்றுள் ஆதாரசத்தியானது சகல அண்டங்களையுந் தாங்குவது. அனந்தாசனம் அசுத்த மாயைக்குத் தலைமையாயுள்ளது. ‡ தர்மம் முதலிய நான்கும் அனந்தரின் சாமர்த்திய ரூபங்களாம். o

---

* மற்றையவை: (க) அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் ஆகிய நான்கும் புத்தியின்குணங்கள். (உ) அதச்சதனம் ஊர்த்வசதனம் ஆகிய இரண்டும் சுத்தவித்தையின்கீழ் உள்ளன. (ங) சிவதத்துவங்கள்.

‡ அனுசிருதர்வடிவிற்பிறிந்திடுமனந்தர்,
குறித்திடும்ஆதாரத்தொடுகூடி,
அசுத்தமாயையதிட்டிப்பவரே. (சதாசிவரூபம்—கஉ)

o அகோரசிவாசாரியர்பத்ததி சிவபூசாவிதியிற் காண்க.

தாபனம் ஆசனத்தில் இருக்குமாறு வேண்டுதல். சந்நிதானம் அந்த இடத்தில் அருள்சுரந்துநிற்குமாறு வேண்டுதல். சந்நிரோதனம் பூசை முடியும்வரையும் அவ்வாறு நிலைபெறுமாறு வேண்டுதல். பாத்தியம் திருவடிகளிலே தீர்த்தத்தைவிடுதல். ஆசமனம் முகத்தில் விடுதல். அர்க்கியம் தலையில்விடுதல். புஷ்பம் முடியிலே சாத்தப்படுவது.

பூசையின் பலன் * —ஆவாகனமாவது ஆன்மா திருவருளில் அழுந்துதல். தாபனமாவது அந்த அழுத்தம் நிலைபெறுதல். சந்நிதானம் வழிபடுவோனது அறிவு சிவபெருமானுடைய நிறைவிற் கலந்திருத்தல். இந்தத்தன்மை நிலைத்தல் சந்நிரோதனம். பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் ஆகிய மூன்றும் ஆன்மசுத்தி, பந்தத்தைப்போடுதல் முத்திபெறுதற்குத்துணை. அபிஷேகம் சிவஞானத்தைப் பெறுதல். அந்தச் சிவஞானம் விளங்கி நிலைத்தற்காகத் தூப தீபங் காட்டுதல். தற்போதத்தைக் கொடுத்தல் நைவேத்தியம்.

---

* பொருவிலுயர்பரிபூரணந்தன்னை
யறிவிலழுந்துதல்ஆவர்கனமே
அலையாதழுந்தநிலைபெறல்தாபனம்.

இவன்றனதறிவுசிவன்பூரணத்திலும்
சிவன்பூரணத்துவமிவன்றனதறிவிலும்
மொன்றையொன்றகலாதுறவுசெய்திருப்ப
தொன்றியசந்நிதானமென்றுரைப்பர்.

இவனிடத்தநுமறிவென்றுமொழியாச்
சமையதுதானேசந்நிரோதனமே.

பாத்தியவாசமருக்கியம்பழுத்த, லான்மசுத்திநிமித்தமாகவும்
நறுமலரதனைநல்வீட்டின்பம், குறுகுதலேதுவாகவுங்கொடுத்து.

க௦. சிவபூசை—இது மிகவும் அகலமான கிரியை. ஆசமனம் விநாயகவழிபாடு முதலியன முடிந்தபின்பு செய்யவேண்டியவை:—பூதசுத்தி, அந்தர்யாகம், இடச்சுத்தி, பொருட்சுத்தி, மந்திரசுத்தி, லிங்கசுத்தி, ஆசனபூசை, சிவநியாசம், அபிஷேகம், ஆவரணபூசை, சிவலிங்க ஆராதனை, செபம், தோத்திரம், குருஸ்துதி, பிரதக்ஷிணம், நமஸ்காரம் ஆகியவைகளாம்.

பூதசுத்தியில் மூன்றுபகுதிகளுண்டு. சரீரசுத்தி செய்தற்காக அதனோடு தொடர்புள்ள ஆன்மசத்தியை யோகமார்க்கமாகச் சிவபெருமானுடைய திருவருளிற் சேர்த்தல்வேண்டும். தத்துவங்கள்யாவற்றையும் மகாமாயையில் ஒடுக்கிச் சூக்குமசரீரப்பகுதிகளையும் விந்துவையும் பிரமாமுதல் சிவம் ஈறாகிய மூர்த்திகளில் ஒடுக்குதல் சூக்குமசரீரசுத்தி. வெளியுடம்பை மந்திரமுறைப்படி வலிகெடச்செய்து திருவருளாகிய அமிர்தத்தினாலே சுத்தமாகச்செய்தல் தூலசரீரசுத்தி.

அந்தர்யாகமாவது மனதிற் பூசைசெய்தல் (அந்தர் = உள், யாகம் = பூசை) வெளியே செய்யும்முறைபோல இருதயத்திலே சிவபெருமானுக்குப் பூசைசெய்யவேண்டும். பூசையின்பலனை அவருக்கு ஒப்புக்கொடுத்து * விட்டு வெளிப்பூசைசெய்தற்கு உத்தரவுபெறுக.

---

நிகழ்மலசுத்திநிமித்தமாக, மகிழ்வுடனே திருமஞ்சனம்பண்ணி, ஞானவிளக்கநண்ணுதற்பொருட்டு, தூபதீபந்தனைத்தினிதளித்து, பின் மனமமைவுபெறத்தற்பொருட்டு நைவேத்தியமுகவாசமுநல்கி

* புண்ணியங்களைப் பலன்கருதாமற் செய்யவேண்டும். பலனைக்கருதினால் அவற்றின்பலனை அனுபவித்தற்குப் பிறவி எடுக்கவேண்டிவரும். ஆதலாற் சிவபூசைசெய்தபின் அதன்பலனைப்

மந்திரசுத்தியாவது மந்திர எழுத்துக்களை மாத்திரைதவறுமல் அவற்றுக்குரிய இடங்களைச்சார உச்சரித்தல். லிங்கசுத்தி விக்கிரகத்துக்குச்செய்யப்படும் அபிஷேகம் முதலியன.

ஆசனமாகப் பூசிக்கப்படுவன பிருதிவிமுதல் மகாமாயை ஈருன தத்துவங்கள்யாவுமாம்.

சிவநியாசம்—சிவலிங்கத்திலே தலைமுதல் கால்வரையுமுள்ள அங்கங்களாக மந்திரங்களைப்பதித்து முழுவதையும் சத்தி ○ வடிவமாக்குக.

பின்பு இருதயத்திலே பூசித்த சிவனை லிங்கத்திலே எழுந்தருளும்படி வேண்டிக்கொண்டு மற்றைய உபசாரங்களைச்செய்து தூபதீபங்காட்டி அபிஷேகம்செய்க.

ஆவரணபூசை: அஃதாவது சிவலிங்கத்தைச்சூழ்ந்துநிற்கும் மூர்த்திகளுக்குச் செய்யப்படும்பூசை. ஐந்து ஆவரணங்கள் உள்ளன. முதலாவதிற் பதினெருமந்திரங்களும் இரண்டாவதில் பீடதளத்தின்மேல்) அனந்தர்முதலிய அட்டவித்தியேசுரரும், மூன்ருவதில் (பீடத்தின்நடுவில்) நந்தி ‡ முதலிய கணேசுவரரும், நான்காவதில் (பீடத்தின் அடியில்) லோகபாலகர்களும், ஐந்தாவதில் (ஆதாரசிலையின்மேல்) தசாயுதங்களும் பூசிக்கப்படும். இவைகள் எல்லாம் சிவமானபான்மையாகக்கொள்ளவேண்டும்.

---

பெருமல்விடுதற்காகப் பூசையைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தல் வேண்டும். பலனில்லையாயின் ஒருவன் ஒருகர்மத்தைச் செய்வதேன் என்றவினுவுண்டு. பூசைசெய்வது ஆசையினுலே. ஒரு குழந்தையை நான் முத்தமிடுவது ஆசையினுலன்றிப் பயன்கருதியன்று. கடவுளை வழிபடவேண்டுமென்ற ஆசையுண்டாக அந்த ஆசையைத்தீர்த்தற்கு வழிபடுவது முறைமை.

○ சத்தியே சிவபிரானது வடிவம் எனப்படும்.

‡ நந்தி, மகாகாளர், பிருங்கி, விநாயகர், இடபதேவர், கந்தர், தேவி, சண்டேசர்.

சிவபூசையிலுள்ள உபசாரங்களின் கருத்து:—உபசாரங்கள் ஐந்துபூதங்களாலாகிய உடம்பினுற் பூசித்துப் பூசையை ஒப்புக்கொடுத்தலே. வாசனை * ப்பொருள்களும் நைவேத்தியங்களும் பிருதுவிபூதத்தையும், நீர் பால் முதலியவை அப்புவையும், விளக்கு இரத்தினுபரணங்கள் தேயுவையும், தூபம் சாமரை வாயுவையும், மணி வாத்தியம் தோத்திரம் ஆகாயத்தையும் சார்ந்தவை. ०

கக. அக்கினிகாரியம்—அஃதாவது நெருப்பை ஓம குண்டத்தில் உண்டாக்கி அதைச் சிவசொரூபமாக்குதல். சிவாக்கினியிலுள்ள விசேஷமாவன: அது நைவேத்தியத்தை நேரே ஏற்பது, அநேகவிதமான சுத்திகளைச் செய்யத்தக்கது, சிலகிரியையின் பலனை அந்தந்தநேரமே கொடுக்கத்தக்கது. நெருப்பை ஓமகுண்டத்தில்வைத்து சிவனையுஞ் சத்தியையும் பூசித்து அவர்களுடைய திருவருளை அந்த அக்கினிக்கு உயிராகப்பெற்று அந்த அருள் வடிவத்திலே கடவுளுக்குப் பூசைசெய்தல் அக்கினிகாரியமெனப்படும். கும்பத்திலேனும் வேறிடத்திலேனும்

---

* வாசனை பிருதுவியின்குணம்.

० சித்தாந்தசாராவலி (உஉ—உச). பலவகையான தீபங்களின் நோக்கமும் நேரேபெறப்பட்டிலதாயினும் அவற்றைப்பூசிக்கும் மந்திரத்தாற்குறிப்பறியில்: அலங்காரதீபம் பரப்பிரமத்தையும் கும்பதீபம் சாதாக்கியத்தையும் அதைச்சூழ்ந்த ஐந்துதட்டும் ஐம்முகங்களையும் கர்ப்பூர தீபம் பராசத்தியையும் விளக்குவனபோலும். பூசிப்போன் இப்பொருள்களாகத் தன்னைப்பாவித்துப் பூசிக்கும் முறைமைபோலும். மற்றையவை உபசாரம. திருநீறு முதற் காட்டிக் கர்ப்பூர தீபத்திலிடுதல் குற்றம் போக்கற்கென்ப: (தீபத்தை அணைப்பது தவறு). பின்பு சுவாமிக்குத் திருநீறு சாத்தும்பாவனை காட்டப்படும்.

உள்ள மூர்த்தியை அந்தச் சிவாக்கினியிலே பூசைசெய்தலுமுண்டு. பூசைசெய்யும்போது அதற்கு அடையாளமாக இரண்டையும் நூலினாலேனும் தர்ப்பையினாலேனும் தொடுப்பர். இவ்வாறு தொடுத்தல் நாடிசந்தானம் எனப்படும்.

ஆகுதி—அக்கினியிலே சொரியப்படும் நெய் பொரி சாதம் முதலியவற்றுக்கு ஆகுதியென்று பெயர்.

சிருக்கு, சிருவம்—நெய் சொரிதற்குரிய பாத்திரம் சிருக்கு எனப்படும். இதிலே சிவ சத்தியைப் பூசை செய்து இதைச் சத்தியாகப்பாவிப்பர். சிருவமாவது சிருக்கைமூடுதற்கு உபயோகிக்கப்படுவது, இது சிவமாகப்பாவிக்கப்படும்.

பூரண ஆகுதி—நெய்யைச் சிருக்கிலே நிறைத்து அதன் மேலே சிருவத்தைக் கவிழ்த்து அதன் நுனியிலே பூவை வைத்து எழுந்துநின்று நெய்யைத் தாரையாகக் குண்டத்தில்விடுதல் பூரணாகுதி. இது ஒவ்வொரு கிரியைப்பகுதியும் முடியும்போது அதன் நிறைவுக்காகச் செய்யப்படுவது.

யாகரட்சை—இரட்சையென்று திருநீற்றுக்குப் பெயர். சிவாக்கினியாலுண்டாகிய சாம்பல் திருநீற்றுக்கு நிகரானது. ஓமகுண்டத்தைச் சுற்றிவைக்கப்படுந் தர்ப்பையை ஓமாக்கினியாற் சுட்டு நெய் சேர்த்துக்குழைக்கப்படுவது யாகரட்சையெனப்படும். இது நெற்றியிலே பொட்டாக அணியப்படுவது*

கஉ. சிவசூரியபூசை—சிவபெருமானது திருவருள் எந்தப்பொருளிற் சிறந்துவிளங்குகின்றதோ அதிலே சிவ

* பொதுவான சனங்கள் இதைக் "கரிப்பொட்டு" என்பர்.

பெருமானை வழிபடல் தகும். கோயிலினுள்ள விக்கிரகங்களும் திருநீறும் சிவனடியார்களும் வேதாகமம் முதலியனவும் வணங்கப்படுதல் யாவருமறிந்ததொன்று. இவற்றிற்போலவே சூரியமண்டலத்திலே சிவபெருமானுடைய திருவருள் விளங்குகின்றது. சூரியனே இவ்வுலகத்தைத் தாங்கி நிற்பது.* இதுவே உயிர் வாழ்தற்கும் காட்சியறிவுக்கும் இன்றியமையாதனவாகிய சூட்டையும் ஒளியையுங்கொடுப்பது. இதனாலே சூரியன் சிவபெருமானை வழிபடுதற்குரிய ஓர் மூர்த்தியாகின்றது. சூரியனிலே சிவபெருமானைப் பூசித்தல் சிவசூரியபூசையெனப்படும்.

கங. அங்குரார்ப்பணமாவது வித்திடுதல் (அங்குரம்—வித்து, அர்ப்பணம்—இடுதல்). பயிரையுண்டாக்குதல் வளர்ச்சியைக் குறிப்பதுமன்றிப் புண்ணியத்தொழிலுமாம். இவற்றுக்காகவும் பின்னேகாட்டப்படும் நோக்கமே பிரதானமாகவும் சுபகருமங்களைத் தொடங்கும்போது அங்குரார்ப்பணஞ் செய்யப்படும். முளையிடுதற்குத் தானியங்களும் தண்ணீரும் வேண்டும்.

தானியங்களாவன தினை, பயறு, எள்ளு, உழுந்து, கோதுமை, கொள்ளு, மொச்சை என்பன. இவைகளைச் சுத்திசெய்து மந்திரங்களால் அர்ச்சித்துச் சிவவடிவமாக்கிவிட்டு, சிவசத்தியாகப் பாவித்துப் பூசிக்கப்பட்ட பாலிலே போடுக. பின்பு மந்திரத்தோடு முறைப்படி எடுத்த

* சூரியன் தனது கவர்ச்சியினாலே பூமிமுதலிய உலகங்களைத் தாங்கி நிற்றலும் அதனை இவைகள் சுற்றுதலும் வேதத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன. மேல்நாட்டார் இவ்வுண்மையையறிந்து மூன்னூறாண்டுகளுஞ் சென்றில.

மண்ணைப் ○ பன்னிரண்டு ‡ பாத்திரங்களிலிட்டு அவைகளை நாலுபக்கமும் வைத்து நடுவிலே கும்பம்வைக்க.

கும்பத்திற் சந்திரனையும் பாத்திரங்களிற் சூரியனையும் பூசித்துத் தானியங்களை அப்பாத்திரங்களிலிட்டுச் சந்திரகும்பநீரை விடுக. ஒவ்வொருநாளுங் கும்பநீரைப் பாத்திரங்களில் விட்டபின் கும்பத்தை நிறைத்துப் பூசிக்க. தானியங்களும் பாலும் சிவசத்திவடிவமாக, சந்திர சூரியர் ஞான சத்திகிரியாசத்தியாக, இவ்வாறுண்டாகும் முளையிலே தெய்வத்தன்மை விளங்கும். கிரியை செய்வோனிலே குற்றங்களுளவாயின் அந்த முளைகள்

---

○ மண் எடுத்தல் (மிருத்சங்க்ரகணம்) சுத்தமான இடத்திலே ஆசாரியர் சங்கற்பம் புண்ணியாகம் சகளீகரணஞ்செய்து நிலத்தைத் தண்ணீரால் தெளித்து பிள்ளையார் பூசை செய்க.

| | | |
|---|---|---|
| ப்ரமணீ | ப்ர[illegible]திதா | ப்ரீச்ரும்மிணீ |
| ப்ராமரீ | பிரமா | அனந்தர் |
| சயந்தர் | பத்ரர் | விநதர் |

பின்மேலே இருக்கும் வடிவம்போல ஒன்பது கோட்டஞ் செய்து நடுவிற் பிரமாவையும் கிழக்கு முதல் வடகிழக்குவரையு முள்ள கோட்டங்களில் அநந்தர் முதலியோரையும் அர்ச்சித்துச் சுவகாந்தமாகச்சாதம் முதலியன நிவேதித்துத் தூப தீபத்தால் பூசிக்க. இதற்குக்கிழக்கே பூமிதேவியையும் பத்துத்திக்குப் பாலகர்களையும் பூசித்து பாரையைச் சுத்திசெய்து அஸ்திரமந்திரம் உச்சரித்து மண்வெட்டியால் மண்ணை எடுத்துப் பாத்திரத்தில் இடுக. பின் விநாயகர் முதலியோரை உத்வாசனம் செய்க.

முளையிடுதல் மண்டபத்திற்கு வடகிழக்கில் அல்லது தென்மேற்கில் பதினாறு கோட்டம் செய்து நடு நான்கு கோட்டத்திலும் நெல்லிட்டு எட்டிதழ்த்தாமரை எழுதி அதன்மேற் கும்பம்

அக்குற்றங்களைக் காட்டத்தக்கவை. முளைகள்செவ்வையாகவந்தால் நன்மையுண்டாகும். புகைநிறமாய்க் கட்டையாய் இருந்தாற் குற்றமுண்டு. குற்றத்திற்காகச் சாந்திசெய்யவேண்டும்.

முளையிடுதலின் ஒரு நோக்கம் குற்றங்களையறிந்து சாந்தி செய்தலாம்.

கச. இரட்சா பந்தனம் (காப்புக்கட்டுதல்)—இதன் நோக்கம் எடுத்தகாரியங் கைகூடுதற்காக அதிலே முழுப் பற்றுவருவித்தலும் ஒருவிதமான இடையூறும் வராமற் காத்தலுமே.* ஒரு மேடையிலே ஒரு பாத்திரத்தை வைத்து அதில் அரிசியும் திருநீறுமிட்டு நூற்கயிற்றிலே

---

வைத்து வெளியேயுள்ள பன்னிரண்டு கோட்டத்திலும் சட்டிகள் வைக்க. புண்ணியாகம் சகளீகாணம் செய்து நடுக்கும்பத்திற் சந்திரனைப் பூசிக்க. பன்னிரண்டு சட்டிகளையும் மண் முதலியவற்றால் நிறைத்துச் சூரியனைக் கோட்டத்திற் குறிக்கப்பட்ட பன்னிரண்டு பெயர்களாற் பூசிக்க.

<table>
<tr><td>திவாகரர்</td><td>வைகர்த்தர்</td><td>விவஸ்வதர்</td><td>மார்த்தாண்டர்</td></tr>
<tr><td>அம்சுமாலி</td><td rowspan="2">சந்திர</td><td rowspan="2">கும்பம்</td><td>பாஸ்கரர்</td></tr>
<tr><td>சூரியர்</td><td>ரவி</td></tr>
<tr><td>ஆதித்யர்</td><td>த்ரிவிக்கிரமர்</td><td>லோக சாட்சி</td><td>லோகப் பிரகாசர்</td></tr>
</table>

‡ சூரியனுக்குள்ள பன்னிரண்டு பெயர்களாலும் பூசித்தற்காகச் சட்டிகள் பன்னிரண்டு. ஒரு சட்டியிற் பூசிப்பதுமுண்டு. சட்டிகள் பாலிகை எனப்படும்.

* சாந்த்யர்தம் விசயார்தம் தத்காலார்தகமிதிஸ்ம்ருதம்—காமிகம்
ரகாரம்சர்வமித்யுக்தம் க்ஷாகாரம்பாபநாசனம்—உத்தரகாரணம்.

திருநீற்றைப் பூசுக. மேடையை ஆதாரசத்தியாகவும் பாத்திரத்தைப் பிரகிருதிதத்வமாகவும் அரிசியை மந்திரங்களாகவும் நூற்கயிற்றை ஆத்மவித்தியா சிவதத்துவங்களாகவும் பாவித்து முறையே பூசித்துப்பாத்திரத்தில் மாயா சத்தியையும் பூசித்து அங்கமந்திரங்களாற் சிவனைப் பூசித்துக் கிரியைசெய்வோனைச் சுத்திசெய்க. கவச மந்திரத்தோடு கயிற்றைக்கட்டி அவனுடைய நெற்றியில் திருநீறு சாத்துக. ஆண்களுக்கு வலக்கையிலும் பெண்களுக்கு இடக்கையிலும் கட்டுக.

கச. வாஸ்து சாந்தி—நிலத்திலே கிரியைகள் செய்யப்படும்போது அதிலுள்ள குற்றங்களைத் தீர்ப்பது அவசியம். இதற்காகமண்டப அதிதேவதையாகிய வாஸ்து பிரமாவுக்குப் பூசைசெய்யப்படும். வாஸ்து பிரமாவுக்கு அக்கினியில் பூசை ஆகுதிகள் செய்தபின், சிவபெருமானை அக்கினியிற் பூசிக்க. அதன்பின் பலாசமிலை முதலியவற்றாலும் தர்ப்பையினாலும் ஒருவடிவம்செய்து அதிலே ஓமாக்கினியைக்கொழுத்திச் சுத்திசெய்யவேண்டிய இடமெங்கும் சுற்றி இழுக்க. வாஸ்துபிரம கும்ப சலத்தைப் பின்னாலே புரோட்சித்துப் போக.

கரு. பஞ்சகவ்வியம்—கவ்வியமென்பதின் கருத்துப் பசுவிலிருந்து பெறப்படுவது. அவை பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பவைகளாம். பசுவானது புண்ணிய வடிவத்தை யுடையதாதலால் அதிலிருந்து தோன்றுவன மந்திரத்தைப் பதித்தற்குத்தகுதியையுடையன. மந்திரத்தைப்பதித்தபின் பஞ்சகவ்வியத்தைப் பருகுவதினால் மனஞ்சுத்தமடையும். பொருள்களின்மேல் தெளித்தலால் அவற்றிலே மந்திரம்பதிந்து அவைகளும் சுத்தமாகும். கவ்வியத்தில் பிரம மந்திரங்களும்

தண்ணீரிற் சிவமூலமந்திரமும் பதிக்கப்படும். பின்பு எல்லாம் சேர்க்கப்படும்.

---

மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் அரிசியைப்பரப்பி ஒன்பது கோட்டங்களாக்கி கீழேகாட்டிய வடிவத்திலுள்ளபடி ஆறு பாத்திரங்கள்வைத்துக் கோட்டத்துக்கும் பாத்திரத்துக்கும் பூசை செய்து அந்தந்தப்பொருள்களைப் பாத்திரத்தில் விட்டு அதற்குரிய மந்திரத்தைக்குறித்த உரு செபிக்க.

வடக்கு

| | | |
|---|---|---|
| | புருஷ தத்துவ கோஷ்டம் ரத்னோதக பாத்ரம் வாமதேவம் (௪) கோசலம் | பிரகிருதிகோஷ்டம் அவ்யக்தபாத்ரம் மூலமந்திரம் (௬) தண்ணீர் |
| காலதத்துவ கோஷ்டம் அமிர்தாத்மகபாத்ரம் சத்யோசாதம் [௫] கோமயம் | சிவதத்வம் சுப்ரதிஷ்டபாத்ரம் ஈசானம் [௧] பால் | சதாக்யகோஷ்டம் சுசாந்தபாத்ரம் தத்புருஷம் [௨] தயிர் |
| | வித்யாதத்துவம் தேஜோவத்பாத்ரம் அகோரம் [௩] நெய் | |

கஎ. சிவஹஸ்தம்—அஃதாவது ஆசாரியர் தம்முடைய கையிலே சிவபெருமானை எழுந்தருளச்செய்தல். எவ்வாறெனில், வலது உள்ளங்கையில் இடது கைப்பெருவிரலாற் சந்தனத்தைத் தடவி நடுவே சிவாசனத்தையும் சிவமூர்த்தியையும் நியசித்துப் பெருவிரல் முதலாக ஐந்துவிரல்களிலும் பிரம மந்திரமைந்தையும் பதித்து ஞானசரீரத்தையும் திருநேத்திரத்தையும் பதித்து சிவபெருமானை எழுந்தருளச்செய்து சிறுவிரல் முதலாக அங்கமந்திரங்களைப் பதித்துக் கையைச் சிவவடிவமாக்குதல்.

கஅ. ஞானவாள்—தர்ப்பையினாலே வாள்போலச் செய்து அதிலே மந்திரத்தைப்பதிக்க, அது ஞானவாளாகும். மெய்யறிவைத்தந்து மலங்களை அறுப்பதாதலால் ஞானசத்திவாளாகப் பாவிக்கப்படும். இதனை

ஞானவாளேந்துமையர் நாதப்பறையறைமின்
மானமாவேறுமையர் மதிவெண்குடைகவிமின்
ஆனநீற்றுக்கவசமடையப் புகுமின்கள்
வானவூர்கொள்வோ நாமாயப்படைவாராமே

என்னுந் திருவாசகத்திலே காண்க.

---

பால், தயிர், நெய், கோசலம், கோமயம், தண்ணீர் என்ற முறைப்படிபூசிக்க. பின்பு கோமயத்தைக் கோசலத்திலும் கோசலத்தை நெய்யிலுமாக இப்படியே முறைப்படி ஒன்றாகச்சேர்த்துத் தண்ணீரை அவற்றோடு சேர்க்க. சங்கிதாமந்திரங்களைச் செபித்து ரட்சை அவகுண்டனஞ்செய்து தேனுமுத்திரை கொடுக்க. பிராயசசித்தத்துக்காயின் மூலமந்திரம் நூற்றெட்டுருச் செபிக்க.

சிவபூசை செய்யும் போது தென்கிழக்குக் கோட்டத்தில் மாவும் மேற்கில் நெல்லிக்காய்ப் பொடியும் வடமேற்கில் மஞ்சளும் அபிஷேகத்திற்காக வைக்கப்படும்.

## ரு. தீட்சையியல்.

### க. தீட்சை

மூவகைத்தீட்சை—தீட்சையென்னுஞ் சொல்லுக்கு ஞானத்தைக்கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்பது கருத்து. (தீ=கொடுத்தல், க்ஷை=கெடுத்தல்) இதுசமயம், விசேஷம், நிர்வாணம் எனமூன்று வகைப்படும். சமயதீட்சையானது ஒருவர் சைவசமயத்திற் புகுதற்காகச் செய்யப்படுவது. ஆதலால் சமயதீட்சை பெறுதவன் சைவசமயத்தவன் ஆகான். அவன் விவாகம் அந்தியேட்டி சிராத்தம் முதலிய சைவக்கிரியைகளைச் செய்தற்குத்தகுதியில்லாதவன். இந்தக்கிரியைகளிலே மந்திரசெபமும் மந்திரத்தாற் பூசையுஞ் செய்யவேண்டியிருத்தலால் தீட்சை பெறுதவன் இவைகளைச்செய்ய இயலாமலிருப்பான். தீட்சை நடக்கும்போது மந்திரத்தினாலுங் கிரியையினாலுஞ் சிவபெருமானுடைய பேரருள் மாணுக்கனுக்குக்கிடைக்கும். அந்த அருளோடு கேட்கப்பட்டால் மாத்திரம் மந்திரசெபம் பயன்படும். ஆதலால் தீட்சை பெறுமற் செய்யும் மந்திரசெபம் பயன்படமாட்டாது. சைவசமயிகள் எழுவயதுவரையிலே தீட்சை பெறவேண்டும். விசேஷ தீட்சை சிவபூசைசெய்யத் தக்கவர்களுக்குஞ் சிவயோகம் சாதிப்பவர்களுக்குப், நிர்வாண தீட்சை ஞானநெறியில் ஒழுகுவோர்க்கும் உரியன.

எழுவகைத்தீட்சை—தீட்சையானது கிரியைவகையால் எழுவகைப்படும். அவையாவன: நயன தீட்சை, பரிசதீட்சை, மானசதீட்சை, யோகதீட்சை, வாசகதீட்சை, ஔத்திரிதீட்சை, சாத்திரதீட்சையென்பன. இவற்றுள் இங்கே சொல்லப்படுவது ஔத்திரிதீட்சை. இதி

லே மற்றையதீட்சைகளும் வரும். மற்றையவை தனியே செய்யப்படுவதுமுண்டு. ஔத்திரிதீட்சையாவது அக்கினிகாரியத்தோடு செய்யப்படுவது.

சமயதீட்சையின் முற்கிரியை: தீட்சைசெய்யும்போது மாணுக்கனுக்கு விசேஷசுத்தி செய்தல் வேண்டும். இது சிவாக்கினியாற் செய்யப்படுவது. இதற்கு ஒருயாகமண்டபம் வேண்டும். யாகமண்டபத்திலே நாலுவகையான பூசை நடைபெறும். அவையாவன: (க) மண்டபத்தைச் சூழ்ந்திருக்கும் மூர்த்திகளுடைய பூசை. (உ) மண்டபத்தைக் காப்பவராகிய யாகரட்சகருக்குக் கும்பத்திலே பூசை. (ஙு) யாகத்திற்குத் தலைவராகிய மண்டலேசுரருக்குப் பூசை. (ச) யாகத்தில் உண்டாக்கப்படும் சிவாக்கினி* யிற் சிவபூசை என்பன.

தீட்சைமுறை—மாணுக்கன் தீட்சை பெறுதற்கு விரும்பிக் குருவிடம்போய் அவருடைய உத்தரவுபெற்று அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யவேண்டும். தக்க இடத்திலே மண்டபத்துக்கிடமெடுத்து மாணுக்கனுங் குருவும் சங்கற்பஞ்செய்வர். பின்பு குரு மண்டபவாஸ்துசாந்திசெய்து மண்டபத்தைக் கலா° ரூபமாகத்தியானித்து உள்ளே போவர். அங்கே விநாயகபூசை, புண்ணியாகம், அங்குராற்பணம், இரட்சாபந்தன பூசை செய்து மாணுக்கனுக்குக் காப்புக்கட்டுவர். பின்புபக்கத்

---

* சிவபெருமான் விசேஷமாக எழுந்தருளியிருக்கும் அக்கினிக்கு சிவாக்கினியென்று பெயர். இது சிவலிங்கத்தைப்போல சிவவடிவமாம்.

° கலையாவது சகல தத்துவங்கள் புவனங்கள் முதலியயாவற்றையும் தாங்குவதாகிய சத்தி. இது ஐந்துவகைப்படும்:—நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை.

திற் குறித்தவிதமாக மண்டபத்திலே கும்பங்கள் வைக்கப்படும்.

பின்வரும் முறைப்படி மண்டபபூசை செய்யப்படும். (க) சிவசூரியன் (உ) தோரண* சூலதேவதைகள் (ஈ) கலைகள் (சாந்தி, நிவிர்த்தி, வித்தை, பிரதிட்டை ஆகிய கலைகளுக்கு கும்பத்திலும், சாந்தியதீதகலைக்கு நடுவில் ஆகாயத்திலும்) (ச) சிவபத்தர்களும், சிவமூர்த்திகளும் (ரு) மேற்குவாயிலில் துவாரபாலகர் (சு) சொடித்தேவர்கள்.

ஆசாரிய சுத்தி—ஆசாரியர் கரநியாசம் பூதசுத்தி செய்து சிவபெருமானை இருதயத்திற்பூசித்து சகளீகரணம், அந்தர்யாகம், மந்திரசுத்திசெய்து தன்கையிலே சிவபெருமானுடைய பேரருளைப்பதித்து அதைத்தலையில் வைத்து எங்குமுள்ள அஞ்ஞானத்தையும் நீக்குவர். யாகத்தை இரட்சித்தற்கும் மாணுக்கனது மும்மலங்களையும் போக்குதற்கும் ஆசாரியர் ஞானவாளை அணிந்துகொள்க. பஞ்சகவ்வியம் செய்து யாகப்பொருளிலும் யாகசாலையிலும் தெளித்துச் சுத்திசெய்க. வாஸ்துபிரமாவையும் லட்சுமியையும் யாகரட்சகரையும் தேவியையும் பூசிக்க. பின்பு லோகபாலகர் தசாயுதங்கள் ஆகிய இவற்றிற்குப் பூசைசெய்து யாகத்தைக்காக்குமாறு லோகபாலகர்களை வேண்டிக்கொள்க. யாகரட்சகரையும் தேவியையும் எடுத்து யாகசாலையைச் சுற்றிக்கொண்டுவந்து வைத்துப்பூசித்து இரட்சிக்கும்படி பிரார்த்திக்க. அதன் பின் விக்கினவிநாயகரையும் சப்தகுருவை ° யும் பூசிக்க.

---

* தோரணங்கள் கொடிகள் முதலியவைகள் தேவர்களைக் குறிப்பன.

° சப்தகுரு ஆவார்—சதாசிவர், அநந்தர், ஸ்ரீகண்டர் உமாதேவியார், சுப்பிரமணியர், விஷ்ணு, பிரமா.

மண்டலேசுரபூசை—சிவவடிவம் எழுதப்பட்ட ஒரு பலகையில் முறைப்படி சிவபூசைசெய்க. இந்த மூர்த்திபே யாகத்திற்குத்தலைவர். மூலமந்திரசெபம்பண்ணிப் பூசாபலனைச் சிவபெருமானுக்கேசேர்த்து அக்கினிகாரியஞ்செய்தற்கு உத்தரவுபெற்றுக் குண்டத்துக்குமுன்னே வடக்குமுகமாக இருந்து அக்கினிகாரியஞ்செய்க.

அக்கினிகாரியம்—பின் சிவாக்கினி உண்டாக்கி அதிலே சிவபெருமானைப்பூசைசெய்து அக்கினியிலுள்ள சிவமும் மண்டலத்திலுள்ள சிவமும் ஒன்றுகப்பாவித்தற்குச் சந்தானம்செய்க. சிவாக்கினியிலே ஆகுதியிடுக.

ஆகுதித்தொகை

(க) மூலமந்திரத்தால் ௧0அ
(உ) பிரமாங்கம் ௧0
(௩) விசேஷ தர்ப்பணம் ௧00 (பூர்ணுகுதியோடு)
(௪) தீமைகள் நீக்கி நன்மையுண்டாக—௪00
(௫) ஒவ்வொருமாணுக்கனுக்காக ௧00 பூர்ணுகுதியோடு.
(௬) மூலத்தினுலும் பிரமாங்கத்தினுலும்-ஸ்வாகாந்தமாய் ஒவ்வொன்று
(எ) இம்மந்திரங்கள் (ஹூம்படந்தமாக) மும்மூன்று

மாணுக்கன் உட்புகுதல்—பின்பு ஆசாரியர் தீட்சைசெய்தற்குச் சிவபெருமானிடம் உத்தரவுபெற்று மாணுக்கனுக்குப் பஞ்சகவ்வியங்கொடுத்து மேற்குவாயிலிலே தர்ப்பையைவளைத்துப்போட்டு அதிற் பிரணவத்தைப்பதித்து அதற்குமேல் அவனை நிறுத்தல்வேண்டும். ஏனென்முல் பிரணவமானது ஆன்மாவைக்கடவுளோடு சேர்க்கும்வல்லமையுடையது. ஆன்மாவாகிய அம்பைப் பிரணவமாகிய வில்லில்வைத்து எய்தால் ஆன்மா கடவுளைச்சேர்ந்து

கடவுளோடு ஒன்றாகும் என்று உபநிடதத்திற்சொல்லப்பட்டிருக்கின்றது. (மூண்டகம்-௨—௨—௪)

நயன தீட்சை (நயனம்=கண்)—பின்பு ஆசாரியர் மாணக்கனை அருட்பார்வையாற் பார்ப்பார். அந்தப் பார்வை அவனுடைய ஆணவத்தின் வலியைக்கெடுக்கும். எவ்வாறெனில், விஷவயித்தியன் விஷந்தீர்க்குந்தெய்வமாகத் தன்னைப்பாவித்து எந்நாளும் மந்திரசெபஞ்செய்து வருதலால் மந்திரசத்தியானது அவனுடைய கண்ணில் நிற்கும். அவன் விஷந்தீண்டப்பட்டவனைப் பார்க்க அப் பார்வையிலுள்ள மந்திரசத்தியினால் விடந்தீரும். இது போல சிவமாகப்பாவித்துச் சிவமந்திர செபஞ்செய்து கொண்டுவந்த ஆசாரியருடைய கண்ணிலே நேத்திரநியாசத்தினாலும் மந்திரசத்திநிற்கும். அவர்பார்க்கும்போது அவருடையபார்வை மாணக்கனுடைய மலவலியைக்கெடுக்கும்.

சகல நற்குணங்களுமுண்டாதற்காகத் தலையிலே வீபூதிபோட்டு நெஞ்சிலேதட்டித் தர்ப்பையினமேல உடம்பைத்தடவுவர்.

அவனுடைய ஆத்மாவைச் சிவமாகப்பாவித்துச் சரீரத்திலே மந்திரத்தைப்பதித்து, அவன் பூசைசெய்தற்காக அவனுடையகையிலே பூக்களைக்கொடுப்பர். பின்பு மந்திரசெபஞ்செய்யப்பட்ட சீலையினால் அவனுடைய கண்ணை மறைத்து அவனைப்பிடித்துக்கொண்டு மண்டபத்தைச்சுற்றிக் கிழக்குவாயிலிற் புகுவர். பாவத்துக்குக் காரணமான பொருள்களைப்பாராது தடுத்தற்காகக் கண் மூடப்படுமென்று சொல்லுவர். பின்பு மண்டலேசுரனுக்குத் தெற்கே நிறுத்திச் சீலையை எடுத்துவிட்டு அவரிலே பூவைப்போடுவித்து அவரைவணங்கவைப்பர்.

தீட்சாநாமம்—அந்தப் பூ மண்டலத்தில் எப்பக்கத்தில் விழுகின்றதோ அப்பக்கத்தின்பெயரே அவனுடைய தீட்சாநாமமாகும்.

பரிசதீட்சை—பின்பு அவனை வலப்பக்கத்திற் பிரணவாசனத்திலிருத்தி அவனுடைய ஆத்மாவை சிவாசனமாகிய இருதயத்திலிருத்தி அவனுக்கு விபூதிபூசித் தம்முடையகையைச் சிவபெருமானது திருக்கரமாக்கி அவனுடையதலையில்வைத்துச் சிவமந்திரத்தைஉச்சரித்து அவனுடைய சரீரம்முழுவதையுந் தடவுக. இதனால் அவனுடைய மாயாமலம்வலிகெடும்.

மண்டலேசுவரருக்குங் கும்பங்களுக்கும் அவன்கையினாற் பூவைச்சாத்தவைத்து வணங்கப்பண்ணி வலப்பக்கத்திலிருத்துக.

யோகதீட்சை—மாணாக்கனுடைய கையிலே தர்ப்பை அடியைக்கொடுத்து நுனியைத்தன்னுடைய முழங்காலிற் சந்திலிடுக்கி, மாணாக்கனது இடது நாடியையும் வலது நாடியையும் தன்னுடைய வலதுநாடி இடதுநாடிகளோடு முறையேதொடுத்து அவனுடையசிற்சத்தியை அவனது வலதுநாடியாலுந் தனது இடதுநாடியாலுமெடுத்துக் தன்னுடைய சிற்சத்தியோடு சேர்த்துச் சிவத்தன்மையையடைவித்துப் பின்பு அவனிற்சேர்த்துவிடுக.

சிவாக்கினியாற் சுத்தி—அக்கினியிலே சங்கிதைமந்திரத்தால் மாணாக்கனுடைய தலையிற் சம்பாத ஓமஞ்செய்க.

சம்பாத ஓமமாவது,—ஆகுதிசெய்யும்போது ஒரு பகுதியை அக்கினியிலும் மிஞ்சியதையவனுடைய தலையிலும் விடுதல்.

வாசகதீட்சை—பரிசதீட்சை பயனுறுதற்காகவும் மந்திரபூசையாகவும் மூலத்தால் நூறாகுதியும் பிரமாங்கத்தால் பத்துப்பத்தும் பூர்ணாகுதியுஞ் செய்து எல்லாக்குற்றங்களுந்தீர்தற்காக மூலத்தால் நூற்றெட்டும் பூர்ணாகுதியுஞ்செய்க. பின்பு மந்திரங்களையுபதேசித்துச் சிவனுக்கும் அக்கினிக்கும் அவனைக்கொண்டு பூசைசெய்வித்து அவனை ஆசீர்வதித்து மூர்த்திகளை விசர்ச்சனஞ்செய்க.

சாத்திரதீட்சை—பின்பு சைவசமய உண்மைகளையும், சைவ அனுட்டானங்களையும் போதிக்க.

விசேஷபோதனை—கடவுளையும் வேதாகமங்களையுங் குருவையும் அவமதிக்கலாகாது. நிர்மாலியத்தையேனும் கோபுரநிழலையேனும் * மிதிக்கலாகாது. சிவபூசை குருபூசை அக்கினிபூசைகளை விடலாகாது.

## உ. மாணாக்கர் ஒழுக்கம்

இந்நாளிலே தீட்சை பெறுவோர் மாணாக்கராதலால் அவரது கடனைக்குறிப்பது முறைமையாம். மாணாக்கராவார் கற்போர். கற்கப்படுவன எவையெனில்: நூல்கள், நற்பயிற்சி, நல்லொழுக்கம், வழிபாடு ஆகிய நான்குமாம். மாணாக்கனது பற்று முழுவதுங் கல்வியிலே செல்லவேண்டும். கற்கும்போது முழு அவதானமும், கற்றதைப்பலமுறை நினைத்தலும், அதைத் தன் அறிவின் நிலையான பகுதியாக்கலும் நூற்கல்வியின் அங்கங்களாம். இவைகள் முறையே கேட்டல் சிந்தித்தல் தெளிதல் எனப்

* நிழலைமிதியாதுபோதல் இயலாதாயின் மூன்றிலொருபக்கிற்குள்ளே மிதிக்கலாம்.

படும். நற்பயிற்சியாவது: மனம் வாக்குக்காயமாகிய மூன்றையும் முறைப்படி பயிற்றுதல். சிறுவயதிலே இவைகளை நல்வழியிலேவிடுதல் மிக எளிது. தீயபழக்கம்பழகியபின்பு அதனைவிடுதல் அரிது. தீயபழக்கம் பழகுமுன் தீயவழிக்குப் போகாதிருத்தல் இலகு. அபின் தின்று பழகியவன் அதைத் தின்னுமலிருத்தல் அரிது. அதைத்தின்னுதவன் தின்னுமலிருப்பது சுலபம். பழக்கங்களை முதற்பழக்குவது சிறுவயதிலாதலால், மாணுக்கர்கள் நற்பழக்கங்களைப் பழகுவது அவசியம். பழகிய பழக்கம் எதுவானுலும் அது இன்பத்தையேகொடுக்கும். மனத்தை நல்லவிஷயங்களிலே செலுத்திப் பழக்கவேண்டும். வாக்கு உண்மையாயும் * நன்மையாயும் ‡ இயன்ற அளவு இனிமையாயும் ᴼ மட்டாயும் * இருத்தல்வேண்டும். இதற்கெதிரானவை பொய் குறளை கடுஞ்சொல் பயனில்சொல் எனப்படும். சிறுவயதிலே ஒருவகையான தற்பெருமைதோன்றும். அதனுலே மாணுக்கர்கள் தங்களுக்கெல்லாந்தெரியுமென்றெண்ணுவதுண்டு. உள்ளபடி கல்வியறிவினுலும் அநுபவத்தினுலும் ஆராய்வினுலுங் குறைந்ததில்லை மாணுக்கரதுநிலை. இந்தப்பிழையான

---

* புறந்தூய்மை நீரானமையும் அகந் தூய்மை
வாய்மையாற் காணப்படும்.—(வாய்மை=உண்மை). திருக்குறள். செ. உகஅ.

‡ அறங்கூறுனல்லசெயினும் ஒருவன்
புறங்கூறுன் என்றல் இனிது ... திருக்குறள். கஅக.

ᴼ பணிவுடையன் இன்சொலனுதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப்பிற ... திருக்குறள். கூ௫.

* யாகாவாராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு கஉஎ.

எண்ணத்தைக் களைந்து, பெரியோர்முன்னே மட்டாகவும் மரியாதையாகவும் பேசிப் பழகவேண்டும். சரீரப்பயிற்சி பலவகைப்படும். உபயோகப்படுத்தப்படாத ஆயுதம் கறைபிடித்துக் கெடுவதுபோலச் சரீரம் பயிற்சியின்மையாற் கெடும். பலவகையான வேலைகள் செய்யவேண்டும். நிலச்செய்கையால் உணவுப்பொருள் அதிகரித்தலாலும் பொருள்வரவுண்மையாலும் மகிழ்ச்சியுண்டாதலாலும், இதுவே சரீரப்பயிற்சிகளுட் சிறந்தது. வீட்டுக்குரிய மற்றைய தொழில்களும் மிகவும் நன்மையானவை. இவையன்றி வெய்யில் மழை பனி முதலியவற்றை அனுபவித்துப் பழகிக்கொள்ளல்வேண்டும். உணவு சுத்தமானதாய் அளவாக இடம்பமில்லாததாயிருத்தல்வேண்டும். வியாதிகளை வருவிக்கும் புகையிலை தேயிலை கள்ளு முதலியவற்றிலுள்ள இயல்பான வெறுப்பை வளர்க்கவேண்டும்.

இரக்கம், பொறுமை, பிறர்நலவிருப்பம், இனியநடை முதலியன சிறுவயதிலே இன்பத்தைத்தருவன. இவற்றை வளர்த்துவந்தால் நல்லொழுக்கந் தானேவரும். நல்லொழுக்கத்தால் மனமும் உடம்பும் உறுதிப்படும், அறிவும் ஆரோக்கியமும் ஆயுளும் நீடிக்கும். விஷய இன்பங்களிலும் வீண்செலவிலும் வெறுப்புற்று, எவ்வகை வசதிக்குறைவையும் பொருட்படுத்தாது மனத்திருத்தியோடு வாழவேண்டும். சாரதியானவன் குதிரையை அடக்கி ஆளுவதுபோல மாணக்கர்கள் மனம் வாக் குக் காயத்தை அடக்கி ஆளவேண்டும்.

வழிபாடு கடவுள்வழிபாடு பெரியோர்வழிபாடென இருவகைத்து. கடவுள்வழிபாடு சிவபுண்ணியம். பெரியோர்வழிபாடு பசுபுண்ணியம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னுந் திருவாக்கை நியமமாகப்

பிடித்துத் தாய்தந்தையருக்குவேண்டிய தொண்டுகளை ஆசையோடு செய்தல்வேண்டும். இறந்தபின் அவர்களுக்குப் பூசை முதலியன செய்பவர்கள் அவர்கள் உயிரோடிருக்கும்போது மரியாதைசெய்தலும் ஏவல்செய்தலும் மிக அவசியம் என்று கொள்ளவேண்டும். இவர்கள் நமையன்குரு முதலிய பெரியோரையும் பேணி நடத்தல் வேண்டும். கடவுளை வழிபடுவோர் கடவுளால் விதிக்கப்பட்ட சமயாசாரங்களைக் கைவிடலாகாது. தாய்தந்தையரையும் அவர்களுடைய முன்னோரையும் வழிபடுவோர் எவ்வகை வசதியீனம் வந்தாலும் அவர்கள் அநுசரித்த குலாசாரந்தேசாசாரங்களையும் ஒருகாலமுங் கைவிடலாகாது. அவைகளைவிட்டோர் அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறார். பெண்கள் மற்றைய கல்விகளோடு சமையல்முறையுங் குழந்தைகளை வளர்க்கும்முறையுங் கற்றல்வேண்டும். யாவரும் நித்தியகருமம் முறைப்படி செய்தல்வேண்டும்.

---

## ௩. நித்தியகர்மமுறை.

க. விடியமுன் நித்திரைவிட்டெழுந்து இபன்றவரை சுத்திசெய்து சிவனைத் தியானஞ்செய்க.

உ. வெளியே போய் மலசலங் கழித்து மண்ணினுலுந் தண்ணீரினுலும் நன்றாகச் சுத்திசெய்க. தடியினல் பல்விளக்கிச் சுத்திசெய்க.

௩. ஸ்நாநமுறை—வாய்கொப்பளித்து ஆசமனம் சகளீகரணம் செய்க. உடம்பின் அழுக்கைப் போக்குதற்கு மண் முதலிய முரணனபொருட்களை அஸ்திரமந்திரத்தாலெடுத்துச் சங்கிதைமந்திரங்களை உச்சரித்துப்

பூசுக. தண்ணீரைச் சிவதீர்த்தமாகப்பாவித்துச் சிவனை நினைத்து ஸ்நானஞ்செய்க. தூய உலர்ந்த சீலையினால் ஈரத்தைத் துடைத்து தூய உலர்ந்தசீலை தரித்துக்கொள்க.

௪. அநுட்டானஞ்செய்தபின் இயலுமானால் ஆலய தரிசனஞ்செய்க.

௫. உணவு—இலையிலேனும் சுத்தமான வேறுபாத்திரத்திலேனும் போசனம் படைக்கப்பட்டபின்பு அதில் அஸ்திரமந்திரத்தால் நீர்தெளித்துக் கவசமந்திரத்தால் அப்பியுட்சணஞ்செய்து சிவனுக்கும் குருவுக்கும் வெவ்வேறாக நிவேதித்து, வீண்பேச்சுப்பேசாமற் சிவபெருமானை நினைத்துக்கொண்டு சாப்பிடுக. (வெள்ளுள்ளி, சுரைக்காய், வெங்காயம், மச்சம், மாமிசம் ஆகிய இவைகள் விலக்கப்படவேண்டும்.) கையலம்பமுன் தத்புருஷத்தினாலே தண்ணீரைப் பருகுக. பின் கைகால் கழுவி ஆசமனஞ்செய்து திருநீறுபூசுக.

௬. படுக்கை—இரவிலே படுக்கையிடத்துக்குச்சென்று திருவைந்தெழுத்தை உச்சரித்துத் தன்னைச் சிவமாகப்பாவித்து நித்திரைசெய்க.

---

## ௪. சைவ அநுட்டானம்.

விடிதற்கு ஐந்துநாழிகைக்குமுன் நித்திரைவிட்டெழுந்து கடவுளை நினைத்துத்துதித்து வெளியேபோய் மலசலங் கழித்துச் சுத்திசெய்து தந்தசுத்திசெய்து ஸ்நானம் பண்ணித் தோய்த்துலர்ந்தசீலை கௌபீனங்களை அணிந்து திருநீறுபூசிச் சைவ அநுட்டானஞ்செய்க. சைவ அநுட்டானத்திற்கு உயிராயுள்ளது ஐந்தெழுத்தாற் கடவுளை

வழிபடுதலே. இதற்குத்துணையாக உடற்சுத்தியும் உள்ளச்சுத்தியும்வேண்டும். அஃதாவது ஆணவம் கர்மம் மாயையாகிய மும்மலங்களின் வலியை அடக்கவேண்டும். இவற்றிற்கு விபூதிஸ்நானமும் மந்திரஸ்நானமுமே முக்கியமானவை. ஆதலாற் சைவ அநுட்டானத்தில் மூன்று பகுதிகளுண்டு. அவை விபூதிஸ்நானம் மந்திரஸ்நானம் கடவுள்வழிபாடு என்பன. இவைகள் ஒவ்வொன்றுஞ் செய்யமுன் ஆசமனஞ்செய்யவேண்டும்.

க. விபூதிஸ்நானம்—சுத்தமான பாத்திரத்திலே தண்ணீர்நிறைத்துக் கிழக்குமுகமாகவேனும் வடக்குமுகமாகவேனும் இருந்து விநாயகரையுங் குருவையும் வணங்கித் தண்ணீரைச் சுத்திசெய்க, எப்படியெனில்:

(க) நீர்ச்சுத்தி—வலதுகைச் சுட்டுவிரல் நடுவிரல்களை மடக்கிக்கொண்டு பெருவிரல் அணிவிரல்களுக்கிடையாக இச்சாஞானக்கிரியாசத்தி வியாபகமான தனது கண்களால், சிவமந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு, தண்ணீரைப் பார்க்க. இதனாலே தண்ணீரிலுள்ள குற்றங்கள் தீரும். இது நிரீட்சணம் எனப்படும். நிரீட்சணம் = பார்த்தல். அஸ்திர (பட்) மந்திரஞ்சொல்லிப் பெருவிரல் சுட்டுவிரல்களால் நீரைச்சுற்றிநொடித்துக் கவசமந்திரம் (வௌஷட்) உச்சரித்துச் சுட்டுவிரல்நுனியினாற் சுற்றுக. இவை முறையே திக்குபந்தனம் அவகுண்டனம் எனப்படும். இவைகள் நீரிலே குற்றங்கள்வாராமற் காக்கும்.

(உ) ஆசமனம்

(௩) விபூதிசுத்தி—திருநீற்றை இடதுகையில்வைத்து அஸ்திரமந்திரத்தினால் (பட்) நீரைத்தெளித்து அதில் ஒரு சிறு கூற்றைப் பெருவிரலணிவிரல்களாலெடுத்து

அஸ்திரமந்திரத்தால் (உம்பட்) தென்மேற்கு மூலையிலே தெளிக்க.

தென்மேற்கு இராட்சதமூலையெனப்படும். விபூதியிற் குற்றமானபகுதியென அது நீக்கப்படும். முன்போல, நிரீட்சணம் திக்குபந்தனம் அவகுண்டனஞ்செய்து பதினொருமந்திரங்களையுஞ் சொல்லி அதிலே பதிக்க. இதனாலே சிவசத்திவடிவமான திருநீற்றிலே சிவசத்தி பதியும்.

(ச) விபூதி அணிதல்—எஞ்சிய விபூதியின் ஒருகூற்றைப் பெருவிரலணிவிரல்களாலெடுத்துத் தலைமுதலாக உடம்பெங்கும்பூசி, மற்றொருகூற்றில் இருதயத்தால் நீர்விட்டுக் கவசத்தாற் (வௌஷட்) குழைத்து நடுவிரல்மூன்றினாலும் சிரசிலும் நெற்றியிலும் மார்பிலும் கொப்பூழிலும் முறையே ஈசானம் முதலிய நான்கினாலும்பூசி, முழந்தாள் புயம் முழங்கை மணிக்கட்டு விலா முதுகு கழுத்து ஆகிய இடங்களிலே சத்தியோசாதமந்திரஞ் சொல்லிப் பூசுக.

(ரு) விபூதிஸ்நானம்—மிஞ்சிய திருநீற்றிலே தண்ணீர்விட்டுப்பிடித்துக்கொண்டு பஞ்சப்பிரமமந்திரங்களைச் சொல்லியபின் தலையிலே தெளிக்க.

உ. மந்திரஸ்நானம்—ஆசமனமும் பிராணயாமமுஞ்செய்து அநுட்டானதீர்த்தத்தைச் சிவதீர்த்தமாக்கி அதை மந்திரஸ்நானத்துக்காக உபயோகிக்க. சிவதீர்த்தமாக்குதல் சிவதீர்த்தகரணமெனப்படும்.

(க) சிவதீர்த்தகரணம்—புருவநடுவிலே ஞானமயமாகிய அமிர்தமுண்டு. அதை இருதயமந்திரம் (வௌஷட்) சொல்லிச் சுட்டுவிரலினால் எடுத்துத் தீர்த்தத்திலே வைத்து மூலமந்திரத்தால் அபிமந்திரித்துத் திக்குபந்தனமும் அவகுண்டனமுஞ்செய்க.

(உ) சலத்தை இடக்கையில்விட்டுச் சங்கிதையால் அபிமந்திரித்துத் தலையிலே தெளிக்க.

(ங) சலத்தை வலக்கையால்மூடிச் சங்கிதையால் அபிமந்திரித்து இடக்கையிலே சலத்தைவிட்டுக் கீழே ஒழுகுகின்ற சலத்தைச் சங்கிதையால் (வௌஷட்) தலையிலே தெளிக்க.

(ச) மிஞ்சிய சலத்தை வலக்கையில்விட்டு மூக்குக் குக்கிட்டப்பிடித்து அந்தத்தீர்த்தத்திலுள்ள சிவசத்தியினாலே சரீரத்திலுள்ள தீவினையைக்கெடுத்து வலக்காற் பெருவிரலிலுள்ள ஞானக்கினியில் அஸ்திரமந்திரம் 'உம் பட்) சொல்லிவிட்டுக் கை கழுவுக. இதனாலே தீவினையின்பயன் அப்போது மறையும். இது அகமர்ஷணமெனப்படும். (அகம் = பாவம், மர்ஷணம் = கெடுத்தல்.)

௫. கடவுள்வழிபாடு—ஆசமனஞ்செய்து

(க) சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுக்குத் தர்ப்பணஞ்செய்க. தர்ப்பணம் = திருப்திசெய்தல். எப்படியெனில்: இரண்டு கையும் நிறைந்த சலத்தை சிவமந்திரத்தைச் சொல்லி மூன்றுமுறை விடுக. சிவமந்திரத்தைப் பத்துத்தரம் சொல்லிச் சிவமந்திரத்தாற் பின்னும் தர்ப்பணம்செய்து, சங்கிதையால்(சுவாகா) ஒவ்வொருதரமும் உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியரென்பவர்க்கு ஒவ்வொருமுறையும் அந்த அந்த மந்திரத்தால் (சுவாகா) தருப்பணஞ் செய்க.

(உ) ஆசமனஞ்செய்து சலத்திலேவைத்த அமிர்தத்தை இருதயமந்திரத்தால் (வௌஷட்) எடுத்துப் புருவநடுவில் ஒடுக்குக. இது தீர்த்தோபசங்காரமெனப்படும்.

இரண்டுகைநிறையச் சலம்விட்டுச் சங்கிதையைச் செபித்து சூரியமண்டலத்திலேவிளங்கும் சிவபெருமானுக்குத் தருப்பணஞ்செய்க.

(௩) வடக்குமுகமாக இருந்து சிவபெருமானது உருவத்திருமேனியாகிய உருத்திரவடிவத்தை நினைத்து சிவமூலமந்திரத்தை நூறுமுறையேனும் ஐம்பதுமுறையேனும் பத்துமுறையேனும் இயன்ற அளவு செபித்து, செபத்தைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்துத் தோத்திரஞ் செய்க. சலத்தைக் கால்படாத இடத்தில் விடுக

---

## ௪. விவாகவியல்.

விவாகமாவது அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கு பயன்களையும் பெறுதற்காக ஒரு வாழ்க்கைத் துணையைப்பெறுதல். இது பலவகைப்படும். சைவ நூலிலே விதிக்கப்பட்ட விவாகமுறையாவது பெண்ணை அவளுடைய தகப்பன் முதலிய ஒருவர் நாயகனுக்குக் கொடுக்கும்வகையே. விவாகத்திலே வழக்கமான முற்கிரியைகளுக்குப்பின் நடைபெறுவன: பிதுர்த்தேவரது ஆசீர்வாதத்தைப்பெறுதல், தாலிகட்டுதல், ஓமம், நவக்கிரகதானம், ஏழடிநடத்தல், அம்மிமிதித்தல், அக்கினியை வலம்வருதல், நாலாம்நாளில் எண்ணெய்தேய்த்து முழுகுதல், அருந்ததியைக்காட்டுதல், பெரியோரது ஆசீர்வாதம் என்பவைகளாம்.

முற்கிரியைகள்—மணமகன் விவாகம்செய்தற்கும், ஆசாரியர் அதை நடத்துதற்கும், சங்கற்பம்செய்தபின், பிள்ளையார்பூசை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனபூசையாகிய இவை நடை

பெறும். மணமகனுக்கு இரட்சாபந்தனமானபிறகு ஆசாரியர் முறைப்படி சிவகும்பத்துக்குந் தேவிகும்பத்துக்கும் பூசைசெய்வார். நவக்கிரககுற்றம்போதற்காகவும் பூசை செய்யப்படும். அதன்பின் ஓமத்துக்காக அக்கினியுண்டாக்கப்படும். யாகேசுவரர் யாகேசுவரியைக் கும்பத்திலே பூசித்து அதன்பின்னர் அக்கினிகாரியஞ்செய்தல் வேண்டும்.

பிதுர் ஆசீர்வாதம்—குடும்பவாழ்வைத் தொடங்கும்போது அது தவறின்றிநடத்தற்கு அக்குடும்பத்து முன்னோரது ஆசீர்வாதம்வேண்டும். இவர்களுட் சிறந்தவர்களாகிய பிதுர்களை மகிழ்வித்தற்கு ஒருவகையான சிராத்தம் மணமகனுடைய தந்தையாலும் மணமகளுடைய தந்தையாலுஞ் செய்யப்படும். இதில் பூணூல் வலமாகத் தரித்தல்வேண்டும். தர்ப்பை கிழக்குமுகமாகவைத்தல் வேண்டும். அறுகும் நெல்லுமன்றி, எள்ளும் அப்பிரதட்சணமுந் தகாதவை. மற்றையவை வழக்கமான சிராத்தம்போல நடைபெறும். இது பிதுர்களை விவாகத்துக்கழைக்கும் பான்மையுமாம்.

மணமகனுக்கு உபசாரம்—மணமகளையழைத்து மணமகனுக்கு வலப்பக்கத்திலிருத்தி இரட்சாபந்தனஞ்செய்த பின்பு, அவளுடைய தந்தையார், (தகப்பன் இல்லையாயின் தமையன், அல்லது தாயாரின் சகோதரன் முதலியோர்) கன்னிகாதானத்திற்காகச் சங்கற்பஞ்செய்வர். பின்பு மணமகனுடைய கால் கழுவி வஸ்திரம் சுகந்தம்கொடுத்தல் முதலிய உபசாரங்களைச் செய்வர்.

கன்னிகாதானம்—மணமகளுடைய தந்தையார் கிழக்குமுகமாகவிருந்து மணமகளைக் கிழக்குமுகமாகவைத்து

இரண்டுகோத்திரப்பேர்களுஞ்சொல்லி மங்கலப்பொருள்களோடு அவளுடைய கையை மணமகனுடைய கையிற் கொடுத்துக் கையிலே தண்ணீர் விடுவர். * மணமகன் மணமகளுடைய கையிற்பிடித்து அவளை ஏற்பர்.

தாலிகட்டுதல்—தாலியிலே சிவலிங்கம் விநாயகர் அல்லது லட்சுமியினுடைய திருவுருவஞ் செய்யப்பட்டிருத்தல்வேண்டும். தாலியையுங் கயிற்றையுஞ் சுத்தி செய்து அதிலே மூர்த்தியைப் பூசித்தபின்பு, அக்கினியினுற் சுத்திசெய்தற்குச் சம்பாதஓமஞ்செய்தல்வேண்டும். மணமகன் தாலியையும் சீலைமுதலியவற்றையும் பெரியோர்களைக்கொண்டு தொடுவித்து ஆசீர்வதிப்பித்தபின் சீலைமுதலியவற்றை மணமகளுக்குக்கொடுப்பார். முகூர்த்தக்குற்றங்களைத் தீர்த்தற்காக ஒரு தானஞ்செய்யப்படும். பின்பு மணமகன் உமாமகேசமந்திரத்தினுல் தாலியைக் கட்டி அந்தமந்திரத்தினுல் முடிச்சிலே திருநீறுசாத்திப் பெண்ணுக்குந் திருநீறுசாத்துவார். மணமகள் மணமகனுக்கு இடப்பக்கத்தில் இருத்தப்படுவள்.

அக்கினிபூசை—மணமகன் அக்கினியிலே மூலமந்திரத்தினுல் நூறு ஆகுதிசெய்க. பின்பு மதுபர்க்கம் ‡ பூசித்தபின் சிவகாயத்திரியால் பூதமோதனம் ○ பார்த்து

---

* கையிலே தண்ணீர்விடுதல். ஒருபொருளை இறுதியாகக் கொடுத்தற்கு முன்னுளில் அறிகுறியாயிருந்தது. நிலம் முதலானவை விற்கும்போதும் இவ்வாறே நடந்தது. தண்ணீர்த்தாரையோடு கொடுத்தலால் இதற்குத் தாராதத்தம் என்று பெயர். (தத்தம் = கொடுத்தல்.)

‡ மதுபர்க்கமாவது தயிர், தேன், சர்க்கரை, நெய், பழம் சேர்த்துச் செய்யப்படுவது.

○ பூதமோதனமாவது பெரியபடையலான சாதம்முதலானவை.

ஆசமனஞ்செய்து நூறு ஆகுதிசெய்க. இருதயமந்திரத்தாற் பசுவையுங் கன்றையுங்* தரிசித்து மூலமந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதிசெய்க.

ஏழடிவைத்தல்—கிரகதோஷம் நீங்குதற்காக நவக்கிரகதானஞ்செய்தபின்பு, மணமகளினுடைய கையைப்0 பிடித்துக்கொண்டு மணமகன் அக்கினிக்குப் பக்கத்தில் ஏழடி நடப்பன். இந்த ஏழடியும் இல்வாழ்க்கையிற்பெற வேண்டிய ஏழு பொருள்களைக் குறிக்கும். இவைகளைப் பெறுதற்கு இருவரும் ஒத்து முயற்சிசெய்தற்குவேண்டிய அருளைக் கடவுளிடத்தும் பெறுதற்காக இது செய்யப்படும். ஏழுபொருள்களாவன: உணவுப்பொருள், சரீரபெலம், கடவுள்வழிபாடு, மனஅமைவு, அறிவு, காலத்துக்குக்காலம் வரும் பொருள்களும் அவற்றால் உண்டாகுஞ் சுகங்களும், யாகத்துக்குவேண்டிய துணைகளுமாம். இதிலே சொல்லும் மந்திரத்தினாலும் கிரியையினாலும் மணமகள் மணமகனுடைய கோத்திரத்தைச் சேர்ந்து ஐக்கியமடைகிறாள்.

கல் (அம்மி) மிதித்தல்—ஒரு கல்லை அசையமாட்டாதவிதமாகவைத்து அதற்குப் பூசித்துப் பெண்ணின் வலதுகாலை மணமகன் கையாற்பிடித்துச் சிவகாயத்திரி மந்திரஞ்சொல்லிக் கல்லுக்குமேலே தூக்கி வைக்கவேண்டும்.

அம்மிமிதித்தலின் நோக்கம் பெண்ணானவள் அந்தக் கல்லைப்போலத் தன்னுடைய நிலையில்நின்றும் பிரியாமலும்

---

* நற்சகுனத்துக்காகப்போலும்.

0 மணமகளுடைய கை கீழாக மேல்நோக்கப் பிடித்தல் வேண்டும்.

இளகாமலுமிருந்து, தனது கணவனிலே உள்ள பற்றுநீங்காமலும் கற்புநெறியினின்றும் விலகாமலும் நிலைப்படுத்தலாம். *

அக்கினியை வலம்வருதல்— அக்கினியைச்சுற்றிவந்து அதிலே பொரியிட்டுப் பின்னும் இருமுறை அம்மி மிதித்தல்முதலியன செய்யப்படும். குற்றங்கள் தீர்தற்காகப் பிராயச்சித்த ஓமமும் கிரியையின் நிறைவேற்றத்துக்காக பூரணாகுதியுஞ்செய்க. இரண்டாம்நாளும் மூன்றாம்நாளும் காலையும் மாலையும் அக்கினிகாரியஞ்செய்க. நான்காம்நாள் இருவரும் எண்ணெய்தேய்த்து ஸ்நானஞ்செய்து இரவில் அக்கினிகாரியஞ்செய்க. மணமகன் அருந்ததி மந்திரஞ்சொல்லி அருந்ததியைக் காட்டிக் கற்புநிலையை விளக்கவேண்டும். பின்பு பூரணாகுதிசெய்க. பிராமணர் ஆசீர்வதித்தபின் பெரியோர்கள் அறுகும் அரிசியுமிட்டு ஆசீர்வதிப்பர். ㅇ அதன்பின் இரட்சாபந்தனம் நீக்கப்படும்.

[அரசாணி—இது பத்ததியிற் கூறப்படவில்லை. இது தேசவழக்கம்போலும். அரசிலே சிவபிரானையும் வேம்பிலே உமாதேவியாரையும் வழிபடும் வழக்கம் இன்றுமுண்டு. ஒரே இடத்தில் அரசும் வேம்பும் நட்டுப் பூசிப்பதுமுண்டு. ஆதலால் அரசு சிவனைக்குறித்தல் பெறப்

---

* இவ்வுண்மையை யறியாத மணமகன் பெண்ணினுடைய காலைத் தூக்கிவைக்கக் கூசுவதுமுண்டு. காலைத் தூக்கிவைத்தால் மணமகன் தாழ்ந்துபோகமாட்டான்.

ㅇ அறுகானது நன்றாகப் பரவுந்தன்மையையும் இலகுவில் அழியாமையையும் உடையதாதலால் இருவரது சந்ததியும் நன்றாகப் பெருகுதற்கும் நிலைத்தற்கும் அறுகினால் ஆசீர்வதிப்பர்போலும். அறுகிடுதல் கந்தபுராணம் வள்ளியம்மைதிருமணப்படலத்திற் கூறப்பட்டிருக்கிறது; பத்ததியில்லை.

படும். ஆல் விஷ்ணுவைக் குறிப்பதென்பர். அரசும் ஆலும் சிவனையும் சத்தியாகிய விஷ்ணுவையும் பூசித்தற்காக நடப்பட்டு அரசால் என்ற பேருண்டாகி அரசாணி என்று மாறியிருக்கலாம். இப்போது இவைகளுக்குப் பதிலாக முருக்கு நடப்படுகின்றது. முருக்கு அரசு போலவே சிவவழிபாட்டுக்குரிய மரமென்பர். அரசு, ஆல், முருக்கு ஆகிய மூன்றும் பிரமா, விஷ்ணு, ருத்திரனாகிய மும்மூர்த்திகளையும் பூசித்தற்குரிய மரங்களென்றும் இவை மூன்றையும் நடும் வழக்கமுமுள்ளதென்றுங் கூறுவர். இதன் முடிவு தெரியவில்லை.]

மணமகன் மணமகளாகிய இருவருடைய சம்மதமும் அறிந்தே விவாகத்தை நிச்சயித்தல் முறைமையாம். கயரோகம் குஷ்டம் முதலிய நோய்களுடையவர்கள் விவாகஞ்செய்யலாகாது. பெண் பதினாறு வயதிலும்* ஆண் இருபத்தைந்து வயதிலும் விவாகஞ்செய்தல் தகும். விவாகமானபின், பெண்ணை அன்பாகவும் மரியாதையாகவும் நடத்தல்வேண்டும். "தந்தை, கணவன், உடன்பிறந்தார், மைத்துனர் ஆகிய இவர்கள் பெண்களை உபசரித்துச் சந்தோஷப்படுத்தவேண்டியது. எந்தவீட்டிற் பெண்கள் சந்தோஷத்தையடைகிறார்களோ அங்கே எல்லா நன்மைகளுமுண்டாகும்." (மநு. ௩—ருரு, ருசு.) ஆயினும் எந்தக்கூட்டத்திலுந் தலைவர் ஒருவரில்லையாயின் ஒழுங்கு வாராதாதலால், குடும்பத்துக்கும் தலைவர் ஒருவர் வேண்டும். அவர் மணமகனே. ஆதலாற் பெண் கணவனுக்

---

* ருதுவாகி மூன்றுவருஷத்தில் விவாகஞ்செய்க என்று மநுஸ்மிருதிகூறும் (௯—௯0). இதற்குமுன் செய்யவேண்டுமென்றும் விதிகளுண்டு.

கமைந்து நடப்பது கடனாகும். இது பதிவிரதா தர்ம மெனப்படும். இதனாலே பெண்கள் அருமையான பெரும் வல்லமைகளைப் பெறுவர். பதிவிரதையாகிய காந்தாரியி னுடைய பார்வையினாலே துரியோதனனுடைய சரீரம் வச்சிரமானதைக் காண்க. * இதிற் பெரியபேறு வே றில்லை. வீட்டுமுயற்சிகளைச்செய்து இல்லறங்களை நடத் தத் துணைசெய்வதே பெண்ணுடைய கடனாதலால் அவ ளுக்கு இல்லாளென்றும், மனையாளென்றும் பெயர்வந் தன. ஆடவனுக்குப்போலவே பெண்ணுக்கும் முயற்சி குறைவற இருத்தல்வேண்டும்.

---

## ரு. கோயிலியல்.

### க. கோயிலின்தன்மை.

கடவுளை வழிபடுதற்குரிய இடங்கள் மூன்று. அவை யாவன: கோயில், சிவஞானிகள், இருதயம். இவற்றுள், சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிக அரிது. அதை ஒருபிறவியிலே ஒருமுறையேனுங் காண மாட்டாமலிருப்பதுமுண்டு. இருதயவழிபாட்டிலே கண் முதலிய பொறிகளேனுந் தலை முதலிய அங்கங்களேனுந் தொழிற்படமாட்டா. இவைகள் சிவதொண்டிலே சென் றால்மாத்திரம் இவை தீயவழியிலே செல்லாமல் நிற்கும். எங்களுக்குள்ள எந்தக் கருவியையுந் தீயவழியிலிருந்து

* இவ்வாறின்றிப் பிறநாட்டுநாகரிகத்தைப் பின்பற்றி கணவன் செல்லாவழிச்சென்று சுவதந்திரத்தைத்தேடி உழலுதல் சிறுதொழிலென்பதறிக.

விலக்குகில் அதை நேரே அடக்குவது மிகவரிது. அதற்கு நல்லவழியைக் காட்டுவதே முறைமை.

"பற்றுக பற்றற்றான் பற்றினைப் பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்றார் திருவள்ளுவநாயனார். ஆதலால் மூவகை வழிபாடுகளுள்ளும், எங்களுக்கு மிகப்பொருத்தமானது கோயில்வழிபாடே. மற்றவைகள் இதற்குத் துணையானவை. மூவகை வழிபாடும் அவசியமே. கோயிலானது பாதகன் முதற் சிவஞானி ஈறாக உள்ள யாவருக்கும் அவசியமானது. ஞானநிலையின் உச்சியை அடைந்து சீவன் முத்தரானவர்க்குக் கோயில் வழிபாடு மிக அவசியமென்பது ஆகமமுடிவு.

"செம்மலர்நோன்றாள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ யன்பரொடுமரீஇ
மாலறநேய மலிந்தவர்வேடமும்
ஆலயந்தானும் அரனெனத்தொழுமே"

என்று சிவஞானபோதங் கூறும். அப்பர்சுவாமிகள் முதலிய மெஞ்ஞானிகள் தங்கள் திருச்செய்கையினாலுந் திருவாக்கினாலு மிதனை வற்புறுத்தியருளினர். கோயிலை மறந்தவர்கள் புலையரென்று உமாபதிசிவம் பாடியருளினர். *

சிவபெருமான் சிவலிங்கத்திலே சரியையிலுள்ளவர்க்கு மறைந்துநின்று அருள்செய்வார். கிரியாவான்களுக்கும் யோகிகளுக்கும் பூசிக்கும்போது தோன்றிநின்றருள் செய்வார். ஞானிகளுக்கு அன்பே தாமாய் எப்போதும் வெளிநின்றருள் செய்வார்.

---

* ஆதியின்மேல், உற்ற திருநீறுஞ் சிவாலயமு முள்ளத்துச், செற்ற புலையர்பாற் செல்லாதே.

திருக்கோயிலானது சைவசித்தாந்த உண்மைகளை உணருதற்குஞ் சாதித்தற்கும் இடமாயுள்ளது. நித்திய பூசையும் உத்சவங்களும் சிவபெருமான் செய்யும் ஐந் தொழில்களை விளக்குவன. ஐந்தொழில் விளக்கப்பட முப்பொருளின் இயல்பு பெறப்படும். இவற்றை உத்சவ விளக்கத்திற் காண்க. சிவலிங்கம்* நந்தி பலிபீடமாகிய இவை முத்திமுறையை விளக்கும். பலிபீடமானது பாசத்தை நீக்கும் சிவசத்தியென்றும், சிவலிங்கம் சிவானந்தத்தைக்கொடுக்கும் சிவமெனவும், நந்தியானது முத்தியடைந்த ஆன்மாவெனவுமறிக. மலத்தை நீக்குவதாதலாற் பலிபீடம் பத்திரலிங்கமெனப்படும். பத்திரலிங்கமாவது மங்கலத்தையுண்டாக்கும் லிங்கமெனப் பொருள்படும். மங்கலமாவது பாசநீக்கம்.

“ ஆபபதிதான் அருட்சிவலிங்கமா
மாயபசு மடலேறனநிற்கு
மாயபலிபீட மாகுநற்பாசமா
மாயவரனிலை யாய்ந்துகொள்வார்கட்கே”—

திருமந்திரம்.

“ தூலலிங்கமாந் தூபி சூக்குமமாமுள்ளிலிங்க
மேலும்பலி பத்திரம்”—சைவசமயநெறி.

“ துள்ளுமறியா மனதைப் பலிகொடுத்தேன்”—

தாயுமானவர்.

சிவபூசையிலே தத்துவங்களின் தன்மையுந் தொடர்பும் அவற்றை நீக்கும் முறைமையும் விளங்கும். மாயா மலக்கழிவோடு அதைச் சார்ந்த கர்மக்கழிவுமாகும்.

---

* லிஙகம் = (பிரபஞ்சத்தை) யொடுக்கி விரிப்பது.

சகளீகரண சிவோகம்பாவனையால் ஆணவத்தை நீக்குஞ்சாதனை யுண்டாகின்றது. இவைகள் சிவயோகப்பேற்றுக்குத் துணையாயுள்ளவை. சிவபூசையிலே காட்டும் ஒளிகளும் செய்யும் மணியோசையும் மத்தள ஓசை முதலியவைகளும், யோகத்திலே தோன்றும் ஒளிக்கும் ஓசைக்கும் இணையாமென்பர்.

கோயிலில் மூன்று வீதிகள் உளவாயின் மூவகைச் சரீரங்களையும், ஐந்து வீதிகள் உள்ளனவாயின் மூவகை உடம்பையும் ஆக்கும் ஐந்து கோசங்களையுங் குறிக்குமென்பர்.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனும் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

கோயிலிலே தீட்சைவகை—ஒருவர் தேடியபொருளினாலாவது சரீரமுயற்சியாலாவது பிரதிட்டை யிறுதியான தொண்டுசெய்தல் சமயதீட்சையென்றும், நித்திய நைமித்திகபூசைசெய்வது விசேஷதீட்சையென்றும், திருவிழாச்செய்வது நிர்வாணதீட்சையென்றும் (உத்தரகாரண) ஆகமங் கூறும்.

---

## ௨. தேவப்பிரதிட்டை.

கல்லினாலேனும் செம்பு முதலிய லோகங்களினாலேனும் விதிப்படி செய்யப்பட்ட திருவடிவத்திலே, வழிபாட்டைபேற்று அருள்புரிதற்காகக் கடவுள் விசேஷமாக எழுந்தருளுதற்குச் செய்யப்படுங் கிரியை பிரதிட்டை எனப்படும். அந்த வடிவத்துக்கு வேதாகமங்களிலே சொல்லப்படும் மந்திரவடிவத்தையும் ஷடத்துவவடிவத்தையுங் கொடுத்தலே இக்கிரியையின் பெரும்பகுதியாம். ஆதலின், பிரதிட்டையான்பின்பு வழிபடப்படுவது மந்திர அத்துவவடிவங்களே.* இந்தக்கிரியையிலே ஐந்து பிரதானமான பகுதிகளுண்டு:-கண் திறத்தல், விக்கிரகசுத்தி, மந்திரம் முதலியவற்றை நியசித்தல், தெய்வ ஆவாகனம், கும்பாபிஷேகம்.

கண் திறத்தல் (நயன உன்மீலனம்)—வாஸ்துசாந்தி அங்குரார்ப்பணம் இரட்சாபந்தனம் முதலிய கிரியைகளானபின்பு இக்கிரியை செய்யத்தக்கது. கண்களைச்செய்து அவற்றிலே கிரியாசத்தி ஞானசத்தி இச்சாசத்தியாகிய மூன்று சத்திகளையும் எழுந்தருளச்செய்தல் இதுவாம்.

விக்கிரகசுத்தி—அபிஷேகஞ்செய்து, சுத்திக்காகவுந் தண்ணீரிலுள்ள உயிர்களின் நன்மைக்காகவும், அவ்விக்கிரகந் தண்ணீரில் வைக்கப்படும்.

நியாசம்—இது விக்கிரகத்திலே அத்துவாக்களையும், மந்திரங்களையும் அட்சரங்களையும் விசேஷமாகவும்,

---

* இக்கிரியையின் மாட்சியை உணராதார் கல்லையுஞ் செம்பையுஞ் சைவர் வணங்குவரென்று பிதற்றுவர். கல்லைக் கல்லென்றேனுஞ் செம்பைச் செம்பென்றேனும் வணங்குவோர் யாருமில்லை.

நியசித்துக் கடவுளுக்குரியவடிவமாக்கி அதிலே கடவுளை எழுந்தருளச்செய்தலாம்.

மண்டபபூசை—கும்பபூசைக்காகவும் அக்கினிகாரியத்துக்காகவும் மண்டபம் வைத்து மண்டபபூசைசெய்க. மண்டபத்தின்நடுவிலே, கடவுளுக்குஞ்சத்திக்குங் கும்பம் வைத்து அவைகளைச்சுற்ற அட்டவித்தியேசுவரருக்குங் கும்பம்வைத்து முறைப்படி பூசைசெய்க. ஓமகுண்டத்திலே அக்கினியை உண்டாக்கிக் கும்பங்களை அதனோடு தொடுத்து அதிலே கும்பமூர்த்திகளைப் பூசிக்க. பின்பு விக்கிரகத்தை அக்கினிக்குப்பக்கத்திலேவைத்து அதைக் கும்பத்தோடு தொடுத்து அதிலே (சம்பாதஓமம்போலப்) பரிசாகுதி செய்க.

மூர்த்தியாவாகனம்—விக்கிரகத்தை அதற்குரிய இடத்தில்வைக்கத்தகும். அது நிலையானமூர்த்தியானால் அந்த மூர்த்தியின் யந்திரத்தை ஆசனத்தில்வைத்து அதற்கு மேலே விக்கிரகத்தை வைக்க. கும்பத்தை விக்கிரகத்தின்முன் வைத்து கும்பத்திலுள்ள மந்திரநியாசங்களை விக்கிரகத்திலேசேர்த்து தெய்வத்தை ஆவாகனஞ்செய்க.

கும்பாபிஷேகம்—பின்பு கும்பத்தை மூர்த்தியில் அபிஷேகித்து மகாபிஷேகமும் விசேஷபூசையுஞ்செய்க.

---

## ௩. உத்சவம்.

உத்சவம் என்ற சொல்லுக்குப் பல கருத்துகள் உண்டு. (உத் = மேலான, சவம் = ஐந்தொழில்; உத் = ஞானம், சவம் = போகமோட்சம்) மேலான ஞானத்தையும் போக மோட்சத்தையுங் கொடுப்பதென்பது ஒரு கருத்து. சிவபெருமான் ஐந்தொழில்களையுஞ் செய்து

உயிர்களைக் காக்கும்முறையை திருவிழாக்கள் வெளியிடுகின்றன. இவற்றுட் கொடியேற்றம் வரையுள்ள திருவிழாக்கள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த் திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையுங் குறிக்கும்.

எவ்வாறெனில்: முதல்நாள் சரீரத்தை உண்டாக்குதலையும், இரண்டாம்நாள் நல்வினை தீவினையைப் பயன்படுத்துதலையும், மூன்றும்நாள் முக்குணங்களையெழுப்புதலையும், நாலாம்நாள் உட்கருவிகளை முயற்சிப்பித்தலையும், ஐந்தாம்நாள் ஞானேந்திரியங்களை வசப்படுத்தலையும், ஆறும்நாள் ஆசைமுதலியவையைக்கெடுத்தலையும், ஏழாம்நாள் எழுவகைமந்திரங்களைப்பதித்தலையும், எட்டாம்நாள் பாசஞானம் நீங்குதலையும், ஒன்பதாம்நாள் மும்மலங்களையுங் கெடுத்தலையும், பத்தாம்நாள் சிவாநந்தத்தைக் கொடுத்தலையும் குறிக்குமென்பர். பத்துநாட்களுக்கு மேற்பட்ட திருவிழாக்காலத்தையும் அதிற்குறைந்தகாலத்தையும் இத்தொழில்கள் அமையத்தக்கதாக வகுத்துக்கொள்ளலாம்.

சாம்பவதீட்சை—அன்றியும் திருவிழாக்கள் சாம்பவதீட்சையெனவும்படும். அஃதாவது, தீட்சைபெறுதவர்களுக்குந் தீயோர்க்கும் மிருகம் பட்சிமுதலியவற்றுக்கும் இந்தத் திருவிழாக்களைக் காணுதலே தீட்சையாகும்,

திருவிழாமுறை—திருவிழாக்களுக்குள், முதல்நாளும் கடைநாளுமே கிரியைகள் மலிந்துள்ளன. முதல்நாட்கிரியையில் ஆக்கப்பட்டவைகள் எல்லாம் பெரும்பாலும் கடைநாளில் நீக்கப்படும். ஆதலால் முதல்நாளின்முறையை விளங்கிக்கொண்டால் கடைநாட்கிரியை தானே விளங்கும். முதல்நாட்கிரியை பின்வருமாறு:

கிராமசாந்தி வாஸ்துசாந்தி—ஊரிலே நன்மையுண்டா தற்காக வைரவமூர்த்திக்குக் கோயிலில் மேற்குவீதி யிலே பூசைசெய்வது கிராமசாந்தியெனப்படும். வீதி யைச் சுத்திசெய்தற்காக வாஸ்துசாந்திசெய்தபின், தர்ப் பைவைக்கோல் முதலியவற்றாற் செய்யப்பட்ட வடிவத் திற் சிவாக்கினியைச்சேர்த்து அது வீதியிலிழுக்கப்படும்.

வழக்கமான முற்கிரியைகளாகிய மண்ணெடுத்தல், முளையிடுதல், காப்புக்கட்டுதல், இதற்குஞ் செய்யப்படும். ஆசாரியர் திருவிழாவை நடத்திமுடிக்கற்காகக் காப்புக் கட்டுவர். திருவிழா குறிப்பதாகிய ஐந்தொழிலைச் செய்து முடிக்கும் பாவனையாக மூர்த்திகளுக்குக் காப்பு கட்டப் படும். உலகங்களெங்கும் நன்மையுண்டாகவுந் தீமைகள் நீங்கவும் ஆசாரியர் மேளமடிப்பர். இது பேரிதாடனம் எனப்படும். (பேரி = மேளம்.) திருவிழாவுக்கு இன்றி யமையாதனவாகிய கொடிமரம், கொடிச்சீலை, அத்திர தேவர், * பலிபீடம் ஆகிய நாலுக்கும் பிரதிட்டைக்கா கக் கும்பபூசை செய்யப்படும்.

உத்சவமூர்த்திக்குப் பூசை ‡ யான பின்பு, அத்திர தேவரையுங் கொடிச்சீலையையும் வீதியாற் சுற்றிக்கொண் டுவந்து, சுவாமியைக் கொடிமரத்துக்குத் தெற்கே வடக்கு

---

* இது சூலம்போன்றது. திருவிழாவுக்குமுன் கோயிலைச் சுற்றிக்கொண்டு போவது. இது சிவபெருமானது கிரியாசத்தி யாம். இதன் மூன்று கவருஞ் முத்தொழிலையுஞ் செய்யும் ஞாநீ ரோதயித்திரி ஆரிணியாகிய சத்திகளாம்.

‡ பூசையிலே பாத்யம் ஆசமனம் அர்க்கியம் புஷ்பமிடுதலா யெ இவற்றுக்கு இருதயமந்திரம் உரியது. இவற்றுக்கு நம, ஸ்வதா, ஸ்வாகா, வௌஷட் முறையே அந்தங்களாம். இதை உணராது பாத்யம்நம அர்க்யம்நம என்று சொல்லுவர் சிலர்.

முகமாகவைத்து, கொடியேற்றுதற்கு வேண்டிய கிரியைகள் செய்யப்படும்.

கொடிமரம்—கொடிமரமானது சிவபெருமானையுங், கொடிச்சீலை ஆன்மாவையும்,* கயிறு பாசத்தையுங், குறிக்கும். படைத்தலுக்குமுன் ஆன்மாவும் பாசமும் ஒடுங்கியிருக்கச் சிவம்மாத்திரந் தோன்றும். இந்த நிலையைக் கொடியேற்றமுன் உள்ள தனிக்கொடிமரம் விளக்கும். படைப்புத்தொழிலான பின்பு ஆத்மாக்களும் பாசமும் தோன்றிநின்று சிவத்தையே ஆதாரமாகக்கொள்ளும். இது கொடிச்சீலையுங் கயிறுங் கொடிமரத்திலே தங்கியிருப்பதினாற் குறிக்கப்படும். கொடிச்சீலையில் ஆன்மாவைக் குறிப்பதாகிய இடபமும் ஆத்மாவை இரட்சிப்பதாகிய அஸ்திரதேவருங் கும்பமுதலிய மங்கலப்பொருள்களும் எழுதப்படும்.

கொடியேற்றம்—புண்ணியாகம் பிள்ளையார்பூசை முடிந்தபின், அஸ்திரதேவரட்சாபந்தனமும் அஸ்திரதேவர்பூசையுங் கொடிமர ரட்சாபந்தனமுங் கொடிமரப் பூசையுங் கொடிமரத்திலே கும்பாபிஷேகமுஞ் செய்து சிவனை ஆவாகிக்க. பின்பு கொடிச்சீலையைக் கொடிமரக கயிற்றிலே கட்டிக் கும்பதீர்த்தந் தெளித்துக் கொடிப் படத்தில் இடபதேவரைப் பூசிக்க. பின் சகல தேவர்களையும் அழைத்து அவர்களுக்குச் சங்கீதத்தாலும் தோத்திரத்தாலும் உபசாரஞ்செய்தபின் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து விநாயகருக்குத் தேங்காயுடைத்துக் கொடியேற்றப்படும்.

---

* சீலை திரோதானசத்தியென்றும், அதில் எழுதப்பட்ட இடபம் ஆன்மாவென்றுஞ் சில இடங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

கொடிமரப்பூசை—கொடிகட்டின இடத்திலே சிவபெருமானுக்குப்பூசையும், கொடிமரத்தின் அடியில் லோகபாலருக்கும் வேறு தேவர்களுக்கும் பூசையுஞ் செய்க. அஸ்திரதேவரில் தெய்வஆவாகனம் ஆனபின் மகா ஆசீர்வாதஞ் சொல்லப்படும். ஐந்தொழிலையுஞ்செய்து உலகங்களைக் கடவுள் காப்பாராக என்பது ஆசீர்வாதத்தின் உட்கருத்தாம்.

சுவாமி வெளிவீதிவருதல்—பலிபீடத்துக்குப் பிரதிஷ்டை இரட்சாபந்தனம் பூசைமுடிந்தபின் சுவாமி வெளிவீதிவரும். அப்போது வாயில்முன்னிலையிற் பிரமாவையும், வீதியின் எட்டுத்திக்குகளிலும் லோகபாலரையும், அழைத்து அவர்களுக்குச் சங்கீதம் முதலிய உபசாரங்கள் செய்யப்படும். அன்றிரவு யாகந்தொடங்கி அக்கினிகாரியம்வரை முடித்து ஒவ்வொருநாளும் பகலிலும் இரவிலும் பூசைசெய்யப்படும். ஒவ்வொருநாளும் அஸ்திரதேவரை எழுந்தருளச்செய்து எட்டுத்திக்கிலும் பலியிடுதல், எட்டுத்திக்கிலும் (உலகம் எங்கும்) திரோதானசத்தியின் முயற்சியாற் கர்மத்தையூட்டி மலபரிபாகம்வரப்பண்ணுதலாம். தீர்த்தத் திருவிழாவிலே அஸ்திரதேவர் தீர்த்தத்திலே முழுகுதல் திரோதானசத்தி பராசத்தியோடொன்றுதலைக் குறிக்கும். அடியார்கள் தீர்த்தமாடுதல் திரோதானசத்தியாலே தாங்கப்பட்ட ஆன்மாக்களும் பராசத்தியிலே படிந்து சிவத்தைத் தரிசித்தலைக் காட்டும். கொடியிறக்கல் ஐந்தொழில்முடிபையும் ஆன்மாக்கள் முத்தியடைதலையும் விளக்கும்.

சாம்பவதீட்சைமுறை—திருவிழாக்காலம் யாவருக்குந் தீட்சைக்காலமாதலால் தீட்சைபெறுங்காலத்திலே

நடக்கவேண்டியவிதமாக அந்த ஊரில் உள்ளவர்களும் அயலூரிலிருந்து கோயிலுக்குப்போகிறவர்களும் நடந்து கொள்ளவேண்டும். எப்படியெனில்: ஆடு கோழி மீன் முதலியவற்றைக் கொலைசெய்யாமலும் புலாலுண்ணாமலுங் கள் முதலிய வெறிப்பொருள்களை யுண்ணாமலும் வேறுவகைபாகவும் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் ஆசாரமாகக் கோயிலுக்குப்போய் சுவாமி தரிசனஞ்செய்ய வேண்டும். புலாலுண்ணல்கள்ளுண்ணல்களை விலக்குதற்குக் கருவியாயுள்ள திருவிழாக்காலத்திலே, திருவிழாக்களை நடத்துபவர் இப்பாதகங்களைச்செய்யும் வேசிகளை ஆட்டத்துக்காகத் திருவிழாக்களுக்கழைக்கிறார்கள். அதுமட்டோ! சிலருடைய இளக்கத்தைக்கண்ட ஆட்டப்பெண்களும் நட்டுவர்களும் ஆடு கொன்றுகொடுத்தாலன்றிக் கோயிலுக்குப் போவதில்லையென்று நிலைநிற்க, அவர்களுக்கஞ்சி இரவிலே ஆட்டுப்பட்டிகளுக்கு ஓடித் திரிகிறார்கள். இத்திருவிழாக்காரருக்கு மீளாநரகமன்றோ கிடைக்கும். திருவிழாக்காலங்களிலே இவர்களை யழைத்துக் கோயிலை அசௌசப்படுத்துதலே பாதகம். அவர்களுக்காக ஆடுமுரித்துக்கொடுப்பது எத்துணைப்பாதகமென்பது வாயினாற் சொல்லத்தக்கதன்று. அப்படியான துர்ச்செயல்நடக்குந் திருவிழாக்களுக்குப் போகிறவர்களும் அவற்றை நடத்தும் குருக்கள்மார் உள்ளிட யாவரும் மாபாதகர்களே.

---

## சு. நவராத்திரி உத்சவம்.

புரட்டாதிமாதத்திலே அமாவாசைக்குப் பின்வரும் ஒன்பதுநாளும் * நவராத்திரியெனப்படும். பூசை சிறப்பாக நடத்தப்படுவது இராக்காலத்திலாதலால் இராத்திரியெனப்படும். (நவ = ஒன்பது) இந்த ஒன்பதுநாட்களிலும் உமாதேவியாருக்கும், துர்க்கை லட்சுமி சரசுவதியாகிய சத்திகளுக்கும், விசேஷபூசை நடைபெறும். உற்சவங்கள் நடப்பதுமுண்டு. துர்க்கை வீரத்தையும், லக்ஷ்மி செல்வத்தையும், சரஸ்வதி கல்வியையும் கொடுக்குஞ் சத்திகளாம்.

பூசைமுறை—மண்டபத்தின் நடுவிலே உமாதேவியாருக்கு ஒரு கும்பமும், அதற்கு வடக்கே இலட்சுமிக்கொன்றும், அதற்குத் தெற்கே சரசுவதிக்கொன்றும் வைக்கப்படும். உமாதேவியாரது கும்பத்திலே துர்க்கைக்கும் பூசைசெய்யப்படும். இந்த நான்கு தேவிகளுக்கும் ஒன்பதுநாளும் பூசை நடைபெறும். ஒன்பதாம்நாள் மகிடாசுரனைத் துர்க்காதேவி கொன்றபாவனை காட்டப்படும். நான்குசத்திகளுக்கும் விசேஷபூசைசெய்யப்படும் நவமியாதலால் மகாநவமியெனப்படும். நவமியில் முடியத்தக்கதாக எழுநாளாகவும் ஐந்துநாளாகவும் மூன்று நாளாகவும் ஒருநாளாகவும் பூசைசெய்வதுமுண்டு.

மானம்பு— இந்த நவமிக்கடுத்தநாள் மானம்பு என்றும் விசயதசமியென்றுஞ் சொல்லப்படும். மானம்பு என்பதற்குத் தலைவர் அம்புபோடும்நாள் என்று கருத்துக்

* பிரதமை தொடங்கி நவமிமுடியும் வரையுமுள்ள நாட்கள். சில ஆண்டுகளில் எட்டுநாளாகவும் சிலவற்றிற் பத்துநாளாகவும் வரும்.

கொள்வர். (மான்=பெரியவர்.) அன்றைக்கு ஒவ்வொரு கோயிலிலுமுள்ள பிரதானமூர்த்தியைப் (சிவன்கோயிலிற் சிவபெருமான், சுப்பிரமணியர்கோயிலிற் சுப்பிரமணியர் ........................) பூசித்துக் கோயிலுக்கு வெளியே அம்புபோடும் இடத்துக்கெழுந்தருளச்செய்வர். கடவுள் அம்புபோட்டுக் கொல்லுவது அசுரனையே. அசுரன் எனப்பட்டது ஆன்மாக்களை வருத்தும் மலமாம். ஒரு வன்னிமரத்தை நட்டு அதை அந்த அசுரனாகப்பாவித்து அந்த மரத்திலே அம்புபோட்டு அதைத் துணிக்கும்பாவனை காட்டப்படும். வன்னிமரம் அரிதாதலால் ஒரு வன்னிமரக்கொப்பை வாழையிலே பதித்துத் துணிப்பதுமுண்டு. சகல ஆன்மாக்களும் சுகமடைதற்காக இது செய்யப்படுவது. ஒன்பதுநாளும் சிவசத்திகளுக்குச் செய்த பூசையின்பலனால் அடுத்தநாள் எந்தக்காரியமுங் கைகூடுமாதலால் அந்நாளுக்கு விசயதசமியென்றுபெயர். (விசயம் = வெற்றி.) அன்றைக்குப் படிப்புத்தொடங்குவது நன்று.

மகிடாசுரனது கதை அருணாசலபுராணத்திலுள்ளது. அது பின்வருமாறு:—

மகிடன் என்ற ஓர் அசுரன் இருந்தான்.* அவன் யாவரிலும் மிக்க பலசாலி. நஞ்சிலுங் கொடியவன். தேவேந்திரன் முதலிய தேவர்களை அடக்கி அவர்களுக்குங் கொடுமைசெய்தவன். ஒருநாள் அவனுடைய சாப்பாட்டுக்காக மிருகங்களைத் தேடி வேட்டையாடுதற்கு ஆயிரம் ஏவற்காரர் காட்டுக்குப் போனார்கள். காட்டிலிருந்த தேவர்கள் அவர்களைக் கொன்றுவிட்டார்கள்.

* மகிடன் = எருமைமுகத்தையுடையவன்.

இதை மகிடனுடைய தூதர்கள் அவனுக்குத் தெரிவித்தார்கள் அதைக்கேட்ட அவனுடைய படைத்தலைவன் சேனைகளோடு போருக்குப் போய்த் தோல்வியடைந்து இறந்தான். மகிடன் இதையறிந்து கோபங்கொண்டு தன் படைகளோடு காட்டுக்குப்போனன். உமாதேவியாருடைய கட்டளைப்படி துர்க்காதேவி அவனைக் கொல்லப் போயினர். துர்க்கை சக்கராயுதத்தினலே தலையை அறுக்க அவன் யானையானன். யானை அழிக்கப்படக் குதிரையானன். பின்பு நெருப்பானன். இப்படியே பலவித உருவங்கொண்டான். ஈற்றிற் பழையபடி எருமைத் தலையோடு தோன்றினன். அப்போது துர்க்கையம்மன் அவனைக் கொன்று அவனுடைய தலையைத் திருவடியால் மிதித்தனர். அதன்பின் வேறுருவங்கொள்ளாது நற்கதியடைந்தான். *

---

## ரு. விளக்கீடு. ‡

விளக்கீடென்னுந் திருவிழா சிவபெருமானே முதற் கடவுளென்பதை விளக்குவது. அவர் பிரம விஷ்ணுக்களுக்கு ஞான ஒளிவடிவாகத் தம்மைக் காட்டிய திருவருளே இந்நாளிற் கொண்டாடப்படுவது. அதற்காகக்

---

* இது மலத்தினல் அறிவுகெட்ட ஆன்மா கடவுளை மதியாதுநடத்தலையும் மலத்தின்சக்திகள் ஒவ்வொன்றுங் கெடக்கெட வேறென்றுதோன்றி ஆன்மாவினின்று முனைத்தலையும் ஈற்றிலே யாவுங் கெட்டபின் சிவசத்தியின் திருவடியாகிய மெய்ஞ்ஞானத்தைப் பெறுதலையும் குறிப்பதுபோலும்.

‡ விளக்கீடு = விளக்கு + ஈடு (= இடுதல்) = விளக்குகள் வைத்தல்.

கோயில்களிலும் வீடுகளிலும் மற்றுமிடங்களிலும் பெருந் தொகையான விளக்குகள் ஏற்றப்படுகின்றன. கோயில் வாயிலிற் பெருநெருப்புண்டாக்கப்படுகின்றது. அதற்குச் சொக்கப்பனை யென்று பெயர். இது கார்த்திகைமாதத் திலே வரும் பூரணையிற் செய்யப்படுவது. (சொக்க என்பது சுஷ்க என்பதன் திரிபென்பர்; சுஷ்க = உலர்ந்த.)

பூசைமுறை—முதல்நாட் சாயங்காலம் மங்கலகிரியை களை முடித்துச் சிவாக்கினியுண்டாக்கி ஒன்பது தகழி களிலே அந்த அக்கினியைப் பூசித்துவைத்தல்வேண்டும். விளக்கீட்டுநாளிலே கோயிலின்முன்பாக ஒரு உயரமான மரத்தை* நட்டு அதைச்சுற்றித் தகழிகள் வைத்தற்குச் சலாகைகள் பொருத்திக் காய்ந்த ஓலை ‡ முதலியவற்றால் வட்டமாக அடைத்துவிடுக. பொழுதுபட்டபின்பு சிவ பெருமானை எழுந்தருளச்செய்து அந்த மரத்துக்குமுன் னே நிறுத்தி அந்த மரத்திலே சிவபெருமானைப் பூசிக்க. ஒன்பது தகழிகளில் ஒன்றை மரத்தின் நுனியிலும், மற் றவைகளை மரத்தைச்சுற்றி எட்டுத்திக்குகளிலும்வைக்க. அந்தத் தகழிகளிலேயுள்ள நெருப்பானது சுற்றியிருக் கும் இலைகளிலே பிடிக்க முழுவதும் எரியும். அந்த மர மும் ஒளியும் சிவபெருமானுடைய சோதிரூபத்தைக் குறிக்கும். எரிந்த சாம்பலைச் சிவபெருமானுக்குச் சாத்தி அடியார்களுக்குங் கொடுக்க. பின்பு மரத்தைத் தறித்து விடுக. ௦

---

* தென்னை, பனை, மூங்கில், சண்பகம், வில்வம் முதலிய மரங்களில் ஒன்று.

‡ தென்னை பனை கமுகு வாழை முதலியவற்றின் இலை.

௦ உத்வாசனக்கிரமம்போலும். மேலே மூன்றுபங்கும் கீழே இரண்டுபங்குமாகத் தறிக்க.

சிவபெருமான் பிரம விஷ்ணுக்களுக்குத் தோன்றிய கதை பின்வருமாறு அருணசலபுராணத்திற் சொல்லப் பட்டிருக்கிறது:-பிரமதேவர் செருக்குக்கொண்டு தாமே முழுமுதற்கடவுளென்றெண்ணி விஷ்ணுவிடம் போய்த் தம்முடைய பெருமைகளைச் சொன்னார். விஷ்ணு பிரமாவைத் தாழ்த்திப்பேசினர். இதனல் இருவருக்குமிடையிற் சண்டையுண்டாயிற்று. இவர்களுடைய விரோதத்தைத் தீர்க்கவேண்டுமென்று தேவேந்திரன் சிவபெருமானுக்கு முறையிட்டார். அப்போது சிவபெருமான் நெருப்புவடிவமான ஒரு மலைபோல இருவருக்குமிடையிலே தோன்றினர். * பிரம விஷ்ணுக்கள் அதைக்கண்டு அஞ்சினர். அது மிகப்பெரிதாயிருந்தபடியால் அதன் அடியையேனும் நுனியையேனும் காண்பவரே தங்களுக்குட் பெரியவராவரென்று தீர்த்தனர். விஷ்ணு அந்த நெருப்பு மலையின் அடியை அறிந்துவருகின்றேனென்று பன்றிவடிவாகப் பூமியை அகழ்ந்து கீழே சென்றார். பிரமா நுனியைக் காணுதற்காக அன்னவடிவத்தோடு மேலே பறந்து போனர். விஷ்ணு அடியைக் காணமாட்டாதவராய் வலியிழந்து இது பரம்பொருளாகிய சிவபெருமானுடைய தோற்றமே என்றும் அதன் நுனியைப் பிரமா காணமாட்டாரென்றும் தீர்த்துக்கொண்டு மகிழ்ச்சியோடு பூமிக்கு மேல் வந்தார். பிரமா முடியைக் காணதிருக்கவுந் தமது

---

* தோன்றியநாள் மாசிமாதச் சிவராத்திரி. ஆண்டுகள்தோறுந் திருவண்ணமலையிலே தோன்றி யருள்செய்யும் நாள் கார்த்திகைப் பூரணை. இருவருக்கும் ஈற்றிலே அருள்செய்தநாள் இந்நாள்போலும். கார்த்திகையிற் கார்த்திகை சுப்பிரமணியப்பெருமானுக்கு விசேடதினம்.

அகந்தையினுல் அதைக் கண்டதாகச் சொன்னுர். அப்போது பிரமாவினுடைய ஆணவவலியைக் கெடுத்தற்காகச் சிவபெருமான் நேரே தோன்றி அவரைக்கண்டித்து இருவருக்கும் அருள்செய்தார். அந்த அக்கினியைக் காட்டும் மலை (அருணுசலமாகிய) திருவண்ணுமலையாம். இந்தப் பேரருள் கார்த்திகைமாசத்திலே கார்த்திகை நட்சத்திரத்திலே எவர்களும் பெறத்தக்கது. இந்த ஒளியைக்குறித்தற்காகவே சைவநாடெங்கும் அந்நாளிரவில் பல இடங்களிலும் விளக்கு ஏற்றப்படுகின்றது.

## சுா. தீபாவலி. *

ஐப்பசிமாதத்தில் அமாவாசைக்கு முதல்நாளாகிய சதுர்த்தசிபொருந்திய விடியப்புறநேரம் (சந்திரனுதிக்குங்காலம்) தீபாவலிக்காலமாம். வீட்டிலும் கிணற்றடியிலும் பூந்தோட்டத்திலும் பிற இடங்களிலும் விசேஷமாக விளக்குகள் ஏற்றப்படுதலால் இந்நாளுக்குத் தீபாவலி என்று பெயர். அன்றைக்கு யாவரும் ஸ்நானஞ்செய்து கோடிச்சீலையுடுத்துக் கோயிலுக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ்செய்து இயன்ற அளவு புண்ணியங்கள் செய்யவேண்டும். அன்றைக்கு உபவாசவிரதம் அநுஷ்டித்தல் உத்தமம். அந்நாள் ஆன்மாக்கள் நரகவழியினின்றுங் கடவுளால் நீக்கப்படும் ० நற்பாக்கியநிலையைக் குறிப்பது. ஆதலாற் கொலை, புலாலுண்ணல், கள்ளுண்ணல் முதலிய பாதகங்களினின்றும் யாவரும் விலகியிருப்பது அவர்களது பெருங்கடனுகும். மற்றைய நாட்களில்

* தீபாவலி = தீப + ஆவலி = விளக்குகளை நிரையாக ஏற்றுதல். தீபாவி யென்பதும் இது.

० இதனுல் இதற்கு நரகசதுர்த்தசியென்று பெயர்.

இக்கொடுந்தொழில் செய்வோரும் அந்தநாளிலே இத் தொழில்களை விலக்கி நடக்கவேண்டும். இதைக் குறிப் பதாகிய ஒரு கதை உபகாமிகத்திலுள்ளது

நரகனென்ற பெயருள்ள ஓர் அசுரராசன் இருந் தான். அவன் குடிகளைக் கொடுமையாக ஆண்டுவந்தான். குளித்தல், சீலைதோய்த்தல், வீடுகளைக்கூட்டுதல், மெழு குதல் முதலிய நற்செயல்களெல்லாவற்றையும் அவன் தனது ஆணையாலே தடுத்து ஊரவர்களைப் பாவவழியிலே செலுத்தினன். இவர்களைக் காத்தற்காக உருத்திரமூர்த் தியானவர் விஷ்ணுவுக்குப் பஞ்சாயுதங்களையுங்கொடுத்து அவரைக்கொண்டு இந்த அசுரனைக் கொல்வித்தார். அசு ரன் சாவதற்குமுன் நல்லறிவைப்பெற்று, தான் செய்த வைகளெல்லாங் குற்றமென் றுணர்ந்து விஷ்ணுவைக் கேட் டுக்கொண்டதாவது, "கடவுளே நான் எனக்காக ஒரு நன்மையையுங் கேட்கவில்லை இந்தநாளிலே எவர்கள் ஆசாரமுள்ளவர்களாய் நல்லொழுக்கமுள்ளவர்களாய்க் கொலை முதலிய பாவங்களை விடுத்துத் தேவரீரைப் பூசிக் கிறார்களோ அவர்களுக்கு விசேஷநன்மைசெய்தருளுக." நரகனென்பது உயிர்களைப் பீடித்திருக்கும் மலங்களென் றும் அவனுடைய கட்டளைகளாகிய ஆசாரக்கேடும் பாவச் செயல்களும்பாவங்களென்றும், அவனைக்கொன்ற விஷ்ணு சிவபெருமானது திருவருளென்றும், அவன் கொல்லப் பட மனிதர் புண்ணியவான்களாயது மலநீக்கத்தாற் சிவா நந்தத்தைப் பெறுதலென்றும் இக்கதை குறிப்பாகவிளக் குவதென்பர். *

---

* இவ்வளவு புண்ணியமான நாளிலே விசேஷ புண்ணியங் களைச் செய்தற்குப் பதிலாகச் சிலர் விசேஷ பாவங்களையே

பத்மபுராணங் கூறுவது:—இந்தநாளிலே செய்யப் படும் பூசைகளும் புண்ணியங்களும் ஆன்மாக்களை நரகத்தினின்றுங் காத்தலால் இது நரகசதுர்த்தசியெனப்படும். ஸ்நானத்துக்குரிய எண்ணெயை லட்சுமியாகவும் தண்ணீரைக் கங்காதேவியாகவும் பாவிக்கவேண்டும். தேவர்களுக்கும் பிதுர்களுக்கும் பூசைசெய்து சிராத்தஞ்செய்ய வேண்டும். பசுக்களிலே பால்கறக்காமலும் எருதுகளைக் கொண்டு வேலைசெய்வியாமலும் அவைகளை அலங்கரிக்க வேண்டும். எல்லா உயிர்களுக்குந் திருத்திசெய்யவேண்டும்.

---

## சா. அபரக்கிரியையியல்

---

### க. அபரக்கிரியையின் நோக்கம்.

அபரக்கிரியையாவது ஒருவர் இறந்தபின் அவருடைய நன்மைக்காக அவருடைய பிள்ளைகள் முதலியோராற் செய்யப்படுங் கிரியை. (அபரம் = பிந்தியது.) அவரவர் செய்தவினையே அவருக்குப் பயன்படுமென்றி அவரது பிள்ளைகள் முதலியோர் செய்யும்வினை அவருக்குப் பயன்

---

செய்கிறார்கள். நாள்தோறும் ஆடு கோழிகளைத் தின்னாதவர்கள் அன்றைக்கு அவைகளைத் தின்னுகிறார்கள். நாள்தோறும் மதுபானஞ் செய்யாதவர்கள் அன்றைக்கு நிறையக் குடிக்கிறார்கள். இது எவ்வளவு தடுமாற்றமான நடை. திருவிழாக்களில் வேசியர்களுக்கும் நட்டுவர்களுக்கும் ஆடு கொன்று கொடுக்கும் பாதகர்களுக்கு அடுத்தபடியில் உள்ளவர்கள் இவர்கள். உண்மைகளை அறிந்தோர் இனியாகிலும் இவைகளை விடுத்து இந்தநாளிலே விசேஷ புண்ணியங்களைச் செய்வார்களாக.

படுவதெப்படி என்ற கேள்வியுண்டு. அதற்கு விடை யாதெனில், ஒருவர்செய்த நல்வினை தீவினைக்குத் தக்க தாகவே அவருக்குப் பிள்ளைகள் வாய்ப்பார்கள். அபரக் கிரியையின் பலனைப் பெறுதற்குரிய நல்வினைசெய்தவன் அக்கிரியையைச் செய்யத்தக்க புதல்வரைப் பெறுவான். இவ்வுண்மையை

"எழுபிறப்புந் தீயவை தீண்டாப் பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்,"

"தம்பொருளென்ப தம்மக்க ளவர்பொருள்
தந்தம் வினையான் வரும்"

என்னுந் திருக்குறள்களிற் காண்க.

ஒருவர்வீட்டிற்குப் போகும் வறியவனுக்கு அவர் சாப்பாடு கொடுக்க, அவனுடைய பசி தீருகின்றது. அவர் அதைக் கொடுக்க நேர்ந்தது அவன்செய்த நல்வினைப் பயனே. அதுபோலப் புதல்வர் முதலானோர் இறந்தவர் களுக்குச் செய்யுங் கிரியைகள் அவர்களுக்கு நன்மையா கின்றன. இவர்கள் செய்தற்குக் காரணமாயிருப்பது இறந்தோர்செய்த நல்வினையே. ஆதலால், புதல்வர்செய் யும் அபரக்கிரியை இறந்தோர்செய்த நல்வினையின் பல னைச் சேர்த்தற்குள்ள வழியே. புதல்வனுக்கு புத்திர னென்றபேர்வந்தது நரகவேதனையினின்றும் நீக்கத்தக்க வனுதலினுலென்க. தாய் தந்தையருக்குச் செய்யவேண் டிய கடன்களைப் பிள்ளைகள் தவறாது செய்தல்வேண்டும். அவர்கள் உயிரோடிருக்கும்பொழுது அவர்களுக்காக வேண்டியவற்றை என்ன பாடுபட்டுஞ்செய்ய முயலவேண் டும். இது மிகப் பிரதானமாம். இறந்தபின்னும் ஆக

வேண்டிய கிரியைகளை அன்போடும் ஆவலோடுஞ் செய்தல்வேண்டும், சூரபன்மனுடைய மகனாகிய இரணியனது செயலைப் பிள்ளைகள் யாவருஞ் சிந்திக்கவேண்டும்.

போர் நடந்துவந்த காலத்திலே அசுரர்கள் யாவரும் இறப்பது திண்ணமென்பதை இரணியன் அறிந்துகொண்டான். அவனும் போருக்குப் போய் மாண்டாற் சூரனுக்காவது தம்பியர்க்காவது மற்றவர்களுக்காவது அபரக்கிரியைசெய்தற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள். இதை உணர்ந்த இரணியன் போருக்குப் போகும் ஆசையைத் தடுத்துப் போருக்குப் போகாததால் உண்டாகும் அவமானத்தைக் கருதாமல், அபரக்கிரியைசெய்தலே தன்னுடைய பெருங்கடனாகக்கொண்டு போருக்குப் போகாமல் மறைந்திருந்தான். தந்தைதாயரைப் பேணாது கடவுளை வழிபடுதல் பயன்படாதென்பது கௌசிகர்சரித்திரத்திற் காண்க. அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒருபிறப்புக்குப் போதியது. அபரக்கிரியையில் அந்தியேஷ்டி, அத்திசஞ்சயநம், பாஷாணபூசை, சிராத்தம் எனப் பலபகுதிகள் உண்டு. சைவசமயக்கிரியைகள் சிவபதத்தை யடையத்தக்கவர்களாகிய சரியை கிரியை முதலியவற்றில் நின்றவர்களுக்கே உரியன. ஆதலாற் சிராத்தம் முதலிய கிரியைகள் அவர்களுக்குச் செய்யப்படும் பூசையேயாம். பிராமணமரபிற் பிறந்த பிள்ளையைப் பிராமணன் என்பதுபோலச் சைவமரபிற் பிறந்தோரைச் சைவர்களென மதித்து அவர்களுக்குச் சைவக்கிரியை செய்யப்படும். ஆயினும் சைவசமயத்தவராய் இறக்கிறவர்கள் பலர் சிவபதத்தையடையமாட்டார்கள். அவர்களுக்குச் சைவக்கிரியைகள் செய்வதினாற் பலன் என்னவென்று கேட்கின், அவர்கள் எந்தநிலையி லிருந்தாலும்

எந்தப்பிறவியை யெடுத்தாலும் அதன்பலனைக் கடவுள் அவர்களுக்குக் கொடுத்தருளுவர். அன்றியும், உள்ளமானது வியாபகப்பொருளாதலாற் கிரியைசெய்வோர் சிரத்தையோடும் அன்போடும் செய்வாராயின் அவைகள் இறந்தோருடைய உள்ளத்திற் கலந்து அவர்களுக்கு இன்பத்தைக் கொடுக்கும்.

---

## உ. மரணக்கிரியை.

சமயதீட்சைபெற்றவர்களுக்கே மரணக்கிரியை செய்யத்தக்கது. தீட்சைபெறுதார் சைவசமயத்தவர் அல்லராதலால் அவர்களுக்குச் சைவக்கிரியை இல்லை. தீட்சை பெற்றவர்களுள்ளும், பாதகங்களிற் கொடியதாகிய புலாலுண்ணலை விலக்காதவர்களுக்குக் கிரியையில்லை. ஆயினும் இவர்களுக்கு இக்காலத்திலே தொடக்குக்கழியும் நாளிலே மரணக்கிரியை தர்ப்பையிலே செய்யப்பட்டுவருகின்றது. இப்படியானவர்கள் இறந்த அன்று இவ்விடங்களிற் செய்யப்படுங்கிரியைகள் அபிஷேகமும் சிவாக்கினி உண்டாக்கலுமே. சுத்தசைவர்களுக்குச் செய்யுங்கிரியை முறையைக் கீழே காண்க.

மரணக்கிரியையிலே மூன்று பகுதிகள் உண்டு. அவையாவன: மேளமடித்தல், சரீரசுத்தி, ஆன்மசுத்தி என்பனவாம். சரீரத்தைச் சுத்திசெய்வன அபிஷேகமும் சிவாக்கினியாற் சுடுதலுமாம். ஆன்மசுத்திக்காக அந்தியேட்டி செய்யப்படும். இதனாலே சமய அநுட்டானத்திலேநேர்ந்த குறைகள் தீரும். (அந்தியேட்டி = அந்த்ய + இட்டி = கடைசியான யாகம்.)

சரீரத்தை ஸ்நானத்தாற் சுத்திசெய்து அலங்காரஞ் செய்க. வீட்டுவாயிலிற் பந்தலிட்டு பந்தலின்நடுவே மெழுகிய இடத்தில் அரிசிபரப்பி அதில் உரலும் உலக்கையும் வைத்துச்சிலைசாத்தி உரலில் மஞ்சட்பொடி இட்டு உரலைச் சுற்றி நாலுமூலைகளிலும் நல்லெண்ணெய் அறுகு அட்சதை வெற்றிலை முதலியவைகளை வைக்க. அதற்குக் கிழக்கே மேளத்தை வைக்க.

மேளமடித்தல்—ஆசாரியர் புண்ணியாகம்செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையுஞ் சுத்திபண்ணி, ஆசமனசகளீகரணஞ்செய்து, மேளத்திலே பிரமா விஷ்ணு உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து, மேளமடிப்பர். * மேளம்அடிக்கும்போது சொல்லும் வாக்கியத்தின் கருத்து:—“பூமியிலும் பதினாலு உலகங்களிலும் உள்ளவர் யாவரும் வாழவும் கொடியோர் அடங்கவும் இப்போது மேளம்அடிக்கிறேன். சகலலோகங்களிலும் ஐசுவரியம் உண்டாவதாக. மிருகம் பட்சி முதலிய பிராணிகளுக்குச் சுகம் உண்டாவதாக. உமாதேவியாருடைய கட்டளைப்படி பேரிகை அடிக்கிறேன்...........சிவபெருமான் இரட்சிக்க” என்பதாம்.

அபிஷேகம்—உருத்திரமூர்த்தியைக் கும்பத்திற் பூசிக்க. உரலையும் உலக்கையையும் பூசித்து எண்பத்தொருபதங்களையுந் தியானித்து மஞ்சட்பொடியை இடிக்க. கும்பதீர்த்தத்தாற் சவத்துக்கு அபிஷேகஞ்செய்து

* இக்காலத்திலே ஆசாரியர் அடித்தற்குப் பதிலாக அவர் மணியை அடிக்கப் பறையர் பேரிகை அடிக்கிறார்கள்.

எண்ணெய். மஞ்சள்மா, கௌபீனம் முதலியவற்றைச் சாத்துக. ‡

சுடலைசேர்தல்—சவத்தைப் பாடையில்வைத்து ஒத்த சாதியாராய்த் தீட்சைபெற்றவர் பூணூலை இடமாகத் தரித்து அஸ்திரமந்திரஞ்சொல்லிக்கொண்டு தோளில்வைத்துப் போகவேண்டும். போம்வழியிலே அஸ்திரமந்திரத்தோடு பொரிதூவுக. ๐ வாத்தியங்களோடு சுடலைக்குக் கொண்டுபோய்ச் சவத்தின் தலை தெற்கே இருக்கும்படியாக வைக்கவேண்டும். சுடலையிற் பந்தலிட்டு முறைப்படி மண்டபம் அமைக்கப்படவேண்டும்.

---

## சுடலைக்கிரியை.

மண்டபவமைப்பு—சதுரமான இடமெடுத்து அதை ஒன்பதுகூறுக்கி, நடுவில் அக்கினிகுண்டமும் வடமேற்கிற் சிவகும்பவேதிகையும் வடகிழக்கில் வர்த்தனிகும்பவேதிகையும் தென்மேற்கிற் பஞ்சகவ்யத்துக்கிடமும் ஒருமுழச்சதுரத்திலிடுக. தென்கிழக்கிலே சவஞ்சுடுதற்காக நாலுமுழ நீளம் இரண்டுமுழ அகலமான இடமெடுத்துக் கோமயத்தாற் சுத்திசெய்க. இந்த இடத்திற்குச் சிதாத்தானம் என்று பெயர்.

---

‡ எண்ணெயாலும் மஞ்சள்மாவினுலும் அபிஷேகஞ்செய்தலும் முறையாம். சுண்ணமிடிக்கும்போது திருவாசகத்துத் திருப்பொற்சுண்ணப்பதிகம் பாடுவதுண்டு. எந்தக்கிரியை செய்யும்போதும் தேவாரதிருவாசகங்களாகிய தமிழ்வேதங்களை ஓதுதல் பெரும்பலனைத் தரத்தக்கது.

๐ ஆசாரியர் அல்லது ஆசாரமுள்ள தீட்சாவான்களே பொரிதூவத்தக்கவர்கள். சில இடங்களிலே நாவிதன் தூவுகிறுன்; என்ன பரிதாபம்!

ஆசாரியாது கிரியை—ஆசாரியர் ஸ்நானம்முடித்துச் சகளீகரணஞ்செய்து சாமான்ய அர்க்கியத்தோடு மேற்கு வாயிலால் உள்ளே போய் சிவகும்பத்துக்கு முன்னே சென்று சகளீகரணம், பூதசுத்தி, அந்தர்யாகம் முதலியனசெய்து, சாமான்யார்க்கியத்தில் மந்திரத்தைப் பதித்துச் சிவகஸ்தஞ்செய்து ஞானவாளை இடுப்பிற் கட்டிக்கொண்டு பஞ்சகவ்வியஞ்செய்து யாகசாலையைச் சுத்திகரிப்பர்.

சுடுமிடத்திலே பூசை—சுடுமிடத்தை இருபத்தைந்து கூறாக்கி நடுக்கூற்றிலும் பக்கத்திலுள்ள நாலுகூற்றிலும் மஞ்சள்மா* இட்டுப் பிருதிவிதத்துவத்தையும் பிரமாவையும் பூசித்து, தென்மேற்குமூலையின் நான்குகூற்றில் வெள்ளைமா இட்டு அப்புதத்துவத்தையும் விஷ்ணுவையும் பூசித்து, இப்படியே தென்கிழக்கிலும், வடமேற்கிலும், வடகிழக்கிலும் முறையே சிவந்தமா கரி பச்சைமாக்களை இட்டு, அக்கினியையும் ருத்திரனையும் வாயுவையும் மகேசுவரனையும் ஆகாசத்தையும் சதாசிவனையும் பூசிக்க. மிஞ்சிய நாலு இடங்களுட் கிழக்கில் மஞ்சள்மா இட்டு இந்திரனையும், தெற்கிற் கறுப்புமா இட்டு யமனையும், மேற்கில் வெள்ளைமா இட்டு வருணனையும், வடக்கிற் சிவப்புமா இட்டுக் குபேரனையும் பூசிக்க.

யாகரட்சகர்பூசை—வர்த்தனி கும்பத்திற் பாசுபதாஸ்திரத்தை முறைப்படி பூசித்து ஞானவாளை ஒப்புக்கொடுத்து யாகத்தை இரட்சிக்கும்படி வேண்டிக்கொள்க.

---

* மஞ்சள்மா மஞ்சட்கிழங்கினாலும், வெள்ளைமா அரிசியினாலும், சிவப்புமா செங்கல்லினாலும், கறுத்தமா உமிக்கரியினாலும், பச்சைமா இலைகளினாலும் செய்யப்படும்.

லோகபாலகர்பூசை—வடகிழக்கு முதலாகக் கிழக்கு ஈருகிய எட்டுத்திக்குகளிலும், வடகிழக்குக்குத் தெற்கேயும், தென்மேற்குக்கு வடக்கேயும், ஒவ்வொரு கும்பம் வைத்து, இந்தப் பத்துக் கும்பங்களிலும் முறையே, சூலம் கதை துவசம் பாசம் வாள் தண்டம் சத்தி வச்சிரம் சக்கரம் பதுமம் ஆகிய தசாயுதங்களைப் பூசித்து, சிவ உத்தரவின்படி யாகத்தைக் காக்குமாறு வேண்டிக் கொள்க.

கும்ப அக்கினிபூசை—வடமேற்குமூலையிலே தானியங்களுக்குமேல் தர்ப்பை திருநீறு முதலியவைகளிட்டுக் கும்பம்வைத்து முறைப்படி சிவபூசைசெய்க. நடுவில் அக்கினிகுண்டத்தில் சிவாக்கினியையுண்டாக்கி அதிலே சிவபெருமானைப் பூசித்துச் சிவாக்கினிக்கும் கும்பத்துக்கும் தனக்கும் தொடர்புசெய்து, மூலமந்திரத்தினுல் நூற்றெட்டுமுறையும், பதினெருமந்திரங்களினுற் பத்துப் பத்துமுறையும் ஆகுதிசெய்து பூரணுகுதி செய்க. * பின்னுமப்படியே விசேஷபூசை* செய்து, இடம் காலம் முதலியவை நன்மையாதற்காக மூலத்தால் நானூறு ஆகுதி செய்து, பின் மூலமந்திரம் முதலியவற்ருல் ஒவ்வொரு முறையும்,* பின்பு மும்மூன்றுமுறையும் ‡ ஆகுதி செய்க.

பிறகு அடுக்குதல்—சிதாஸ்தானத்தின் நடுவில் சதுரமாக மஞ்சட்பொடியிட்டபின், நடுவே குங்குமத்தால் முக்கோணமிட்டு இந்திரனையும் அக்கினியையும் பூசித்து,

---

* இது மந்திரங்களுக்குச் செய்யப்படும்பூசை, தர்ப்பணுகுதியெனப்படும்; அந்தம் ஸ்வாஹா.

‡ இது மந்திரசத்தியை ஏற்றுவது; தீபணுகுதியெனப்படும்; அந்தம் ஹூம்பட்.

அதில் விறகுகளை அடுக்கி இயன்ற அளவு சந்தனக்கட்டையுமிட்டுச் சிதையைச் சீலையாற் சுற்றி, தர்ப்பை, பூ, எள்ளு ஆகிய இவற்றுற் பூசைசெய்க.

பிரேதசுத்தி—பிரேதத்தைப் பஞ்சகவ்வியத்திஞலும் கோமயத்திஞலும் விசேஷ அர்க்கியத்திஞலுந் தெளித்து திருநீறுசாத்தி நல்லசீலையுடுத்துப் பூணூலிட்டுக் குண்டத்துக்குத் தெற்கே பிரணவாசனமான தர்ப்பையில் வைக்க.

அந்தியேட்டி—நிரீக்ஷணம் முதலான சுத்திசெய்து, பிரேதத்தின் இருதயத்தில் ஆசனபூசை செய்து ஆன்மாவை அதில் அழைக்க. பின்னர் அதற்காக மூன்று ஆகுதிசெய்து பிரேதத்திற் பஞ்சப்பிரமமந்திரங்களைப் பதித்து அதன் இருதயத்திற் சிவனை ஆவாகனஞ்செய்து, அந்த ஆத்மா அதில் நிலைத்தற்காக நூறு ஆகுதி செய்க.

ஆசாரியர் சவத்துக்குந் தனக்கும் நாடிசந்தானஞ் செய்து நித்தியானுஷ்டான குற்றந்தீருவதற்காக மூலத்தால் நூறு ஆகுதிசெய்க. அவர் பிரேதத்திற் பிரவேசித்து ஆத்மாவைத் தம்மோடுசேர்த்துப் பின்னர் அதற்குவெளியேவந்து அதைத் தம்முடைய இருதயத்திற்குக்கொண்டு போய்த் தம்மோடைக்கியப்படுத்தி உருத்திரனைத் தியானித்துக்கொண்டு அதை வெளியே கொண்டுவந்து பூரணுகுதியோடு அக்கினியிற் சேர்த்து உருத்திரமூர்த்தியை அடையும்வழியில் விடுவர். *

---

* இது சிவலோகத்தை அடைவித்தற்குரிய முதற்கிரியை. சபிண்டீகரணம்வரையுமுள்ளவைகள் அடுத்துவரும்படிகள். சபிண்டீகரணமே சிவலோகத்திற் சேர்ப்பது.

பலவகைக் குற்றங்களும் நீங்குதற்காக நூற்றெட்டு ஆகுதிசெய்து சிவகும்பத்தைப்பூசித்து அதிலுள்ள மூர்த்தியை அக்கினியிற்சேர்த்து அட்டபுஷ்பஞ்சாத்தி அதையும் மற்றவைகளையும் உத்வாசனஞ்செய்க.

சுடுதல்—சவத்தைத் தெற்கே தலையாகச் சிதையில் வைத்து வஸ்திரத்தால் மூடிவிடுக. கிரியைசெய்வோன் ஸ்நாநஞ்செய்து சிவகும்பத்தைத் தலையில்வைத்து கும்பத்தில் துவாரஞ்செய்து சிதையை மூன்றுதரஞ்சுற்றித் தலைப் பக்கத்தில் வடக்குமுகமாகநின்று கும்பத்தின் மேற்பாதியை எடுத்துவிட்டு மிஞ்சியநீரில் பொன் அரிசிபோட்டுத் தற்புருஷமந்திரத்தால் நீரையும் அரிசியையும் பிரேதத்தின் வாயிலிடக்கடவன். ஆசாரியர் குண்டாக்கினியை எரியப்பண்ணி அதையெடுத்து பிரேதத்தின் தலையில் வைத்து சிருக்கில் நெய் தேன் பால்களைவிட்டுப் பின்னே சொல்லும் மந்திரங்களைச் சொல்லிப் பூர்ணாகுதிசெய்க. மந்திரத்தின் கருத்து: அக்கினிதேவனே மந்திரத்தாற் பரிசுத்தமாயிருக்கிற சவத்தின்மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக்கொள்ளும் என்பதே.

பின்பு வர்த்தனிகும்பத்தை இடதுதோளில்வைத்து நீரைக் கரகத்தின் மூக்கினால் தாரையாகவிட்டு மும்முறை சுற்றி அதைக் கவிழ்த்துவிட்டுத் திரும்பிப்பாராமல் நீர்க்கரைக்குப்போய் ஸ்நாநஞ்செய்து கரையில் பிதுர்த்தர்ப்பணஞ்செய்து அகோரமந்திரஞ்செபித்து சவத்தையுந் தேசிகனுஞ் சிவனைப் பூசிக்க.

———

## ரு. அஸ்திசஞ்சயனம்.

அஸ்திசஞ்சயனம் எலும்பைச் சேர்த்தல் என்று பொருள்படும். முதலைந்து நாட்களிலொன்றிலேனும் ஏழாம் ஒன்பதாம் நாட்களிலேனும் இது செய்யத்தக்கது.

நெருப்பு தணிந்துபோனால் சிதைக்குக்கிட்ட சிவாக்கினி உண்டாக்கவேண்டும். பிராயச்சித்தத்துக்காக அஸ்திரமந்திரத்தால் நூறாகுதிசெய்து பிருதுவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் பூசித்து, ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று ஆகுதிசெய்க.

ஒருபாத்திரத்திலே பாலைவிட்டு அதை ஒருமுக்காலியில் வைத்துவிட்டு, கால் கொப்பூழ் நெஞ்சு முகம் தலையாகிய பகுதிகளிலுள்ள எலும்பை அவ்வவ்விடத்துக்குரிய மந்திரத்தாலெடுத்து அந்தப்பாத்திரத்தில் வைக்க. பின்பு அதைத் தீர்த்தத்திலிடுக. சாம்பலை ஆழ்ந்த நீரிலிடுக.

---

## சு. பாஷாணபூசை.

பாஷாணபூசையாவது இறந்த ஆன்மாவை ஒரு கல்லிலே பூசைசெய்தல். இந்தப்பூசையினாலும் இதனோடு செய்யப்படும் மற்றுங் கிரியைகளினாலும் ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினாலே அதற்குத் திருப்தியும் மற்றவைகளால் அதிலுள்ள குற்ற நீக்கமுமுண்டாகும்.

கிரியைசெய்வோன் சவரஞ்செய்வித்து ஸ்நானம் முதலியவற்றை முடித்து ஒருமண்டபம் அமைத்துச் சங்கற்பம் விநாயகபூசை புண்ணியாகம் முடித்து நடுவில் ஒரு

மேடையிலே கும்பம் வைத்து உருத்திரமூர்த்தியைப் பூசிக்க. அதற்குமுன்னே பன்னிரண்டு அங்குல நீளம் ஆறங்குல அகலமுள்ள சுத்தமான செங்கல்லை வைத்து அதில் மனிதவடிவமெழுதி இறந்த ஆன்மாவை ஆவாகித்துச் சகல உபசாரமுஞ்செய்க. பின்பு அபிஷேகஞ்செய்து சீலை அணிந்து பூசை தர்ப்பணஞ்செய்து பிண்டமிடுக.

தர்ப்பணமுந் தானமும்—தர்ப்பணம் திருத்திக்காகச் செய்யப்படுவது. இது இருவகைப்படும். வாசோதக மாவது சீலையிலே தண்ணீரை விட்டுக் கொடுக்கப்படுவது. இது ஒவ்வொருநாளும் மூன்றுமுறை கொடுக்கப்படும் திலோதகம் எள்ளோடு கொடுக்கப்படும் தண்ணீர். (திலம் = எள்ளு, உதகம் = தண்ணீர், வாசம் = சீலை) இது, முதல்நாள் மூன்றுமுறையும், அடுத்த நாட்களில் ஒவ்வொன்று கூடவுங்கொடுக்கப்படும். பத்தாம்நாளிற் பன்னிரண்டு தர்ப்பணம் செய்யப்படும். ஒவ்வொரு தர்ப்பணமும் பலனடைதற்காக ஒவ்வொருதானம் செய்யப்படும். இது ஏகோத்தரவிருத்தி தானமெனப்படும். (ஒவ்வொன்று பின் கூடுவது என்பது கருத்து.)

நவசிராத்தம்—இது முதல்நாள் தொடங்கி ஒற்றை நாட்களில் தகுதியுள்ள ஒருவருக்குத் தானமாகச் செய்யப்படுவது. இது ஆன்மாவை நற்கதி அடையப்பண்ணுவது. (நவம் = புதிய)

சங்கிதாசிராத்தம்—இது சங்கிதைமந்திரங்களுக்கு செய்யப்படும்பூசை. ஒவ்வொருநாளும் சங்கிதைமந்திரத்துள் நேத்திரமொழிந்த பத்தில் ஒவ்வொன்றாக ஒவ்வொரு அந்தணரைப் பாவித்துப் பூசித்து அவருக்குத்

தானஞ்செய்க. இதனால் இறந்தவரது நித்தியகருமா னுட்டான குற்றங்கள் தீரும். இது மந்திரவடிவம் உண் டாக்கப்படும் முறையுமாமென்பர்.

உருத்திரபலி—உருத்திரனைப் பூசித்து ஆன்மாவை உருத்திரனோடு சேர்த்தற்காக இது செய்யப்படுவது. ஒரு சுத்தமான இடத்தில் மண்டபம் அமைத்து நடுவிலே ஒரு கும்பமும் அதைச்சூழப் பதினொரு கும்பமும் வைத்து நடுவிலுள்ள கும்பத்திலே மஹாருத்திரமூர்த்தியையும், மற்றவைகளிற் பதினொரு ருத்திரர்களையும் பூசிக்க. வாழைப்பழம், சர்க்கரை, எள்ளு ஆகிய இவைகள் கலந்த அரிசி உருண்டைகளைப் பலியாக இடுக. பின்பு இறந்த ஆன்மாவுக்கும் பிதுர்களுக்கும் பலிகொடுக்க. கும்பத் தையுங் குருவையும் சுற்றிக்கும்பிடுக.

பிரபூதபலி—கல்லிலே நிற்கும் ஆன்மாவுக்கு இன்ப முண்டாதற்காக "பிரபூதபலி" இடுக. அஃதாவது பெரிய அளவான சாதம், கறி, தயிர், நெய், பாயசம் முத லியவைகளைப் படைத்து நைவேத்தியம் செய்தல். பின்பு தூபதீபம்காட்டிப் பூசைசெய்க.

பாஷாணத்தில் நிற்கும் ஆன்மாவை ருத்திர கும்பத் தோடு சேர்த்துச் சிவலோகத்தையடையத் துணைசெய்க. கல்லையுங் கும்பத்தையும் பலியையும் கடலில், அல்லது நதியில், அல்லது வேறு ஜலத்தில்விட்டு ஸ்நானம்செய்க.

---

## ரு. ஏகோதிட்டம். *

ஆசௌசம் நீங்கியநாளுக்கு அடுத்தநாளில் ஏகோதிட்டம் செய்யத்தக்கது. இதன் நோக்கம் இறந்தவருடைய ஆன்மாவைச் சுத்திசெய்வதாம். கிரியைகளெல்லாம் இடப்பக்கமுறையாகச் செய்யப்படும்.

முதல்நாள் தகுதியுடையவரான சிவதீக்ஷைபெற்ற ஒருவரைச் சிராத்தத்துக்கு† வரும்படி உபசாரத்தோடு கேட்டுக்கொள்ளவேண்டும். அன்றிரவு சிவபெருமானை நினைத்துக்கொண்டு நித்திரைசெய்யவேண்டும். அடுத்தநாட்காலையில் நித்தியகருமங்களெல்லாம் முடித்துக்கொண்டு சிராத்தத்திற்கு வந்தவருக்குச் சகல உபசாரங்களுஞ்செய்து மேற்குமுகமாகவேனும் வடக்குமுகமாகவேனும் இருத்தி ஏகோதிட்டஞ் செய்யப்போகிறேனென்று அவரிடம் உத்தரவுபெற்று, அவருக்கு ஆசனமாக மடித்த தர்ப்பையைக் கொடுக்க.

---

சிராத்தங்களிலே கிரியைகளுக்குரியமந்திரம் பின்வருமாறு: க. இருத்துதல்—வாமதேவம்; உ. இரட்சை—அஸ்திரம்; ங. அவகுண்டனம்—கவசம்; ச. ஆசனங்கொடுத்தல்—சத்யோசாதம்; ரு. ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம்—வாமதேவம்; சா. தூபதீபங்கொடுத்தல்—அகோரம்; எ. பூவைச்சாத்துதல்—வாமதேவம்; அ. எள்ளிடுதல்—ஈசானம்.

* ஏக + உத்திஷ்டம் = ஒருவரைக் கருதிச் செய்யப்படுவது. ஒருவரென்பது இறந்தவர்.

சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம். சிரத்தையாவது பற்று, அன்பு. இறந்தவர்களிலே மிகுந்த பற்றும் அன்புமுடையவர்களே இந்தக் கிரியைகளைச் செய்யவேண்டும். இக்கிரியைகளுக்குயிராயுள்ளது அன்பேயாதலாற் சிரத்தையில்லாமற் பராமுகமாய்ப் பிறவிஷயங்களில் மனதைவிட்டுச்செய்வது சிராத்தமன்று.

இறந்தவருக்குப்பூசை—இறந்துபோனவரை மந்திரத்தினல் அழைத்து ஆசாரியரிலே எழுந்தருளும்படி வேண்டிக்கொள்க. அவருக்குப் பூவைச்சாத்தித் தூபதீபங் கொடுத்துப் பூசைசெய்து "திருப்தியுண்டாகுக" என்று சொல்லுக. பின் சாப்பாடுகளேனும் சாப்பாட்டுக்குரிய பொருள்களேனுங் கொடுக்க. ஏழைகளுக்கும் போசனங் கொடுக்கவேண்டும்.

பிண்டமிடுதல்—போசனம் முடிந்தபின் உத்தரவு பெற்றுக்கொண்டு தெற்கு நுனியாகத் தர்ப்பையைப் பரப்பி அதில் எள்ளிட்டு எல்லாவகையான உணவுகளையுஞ்சேர்த்துப் பிண்டமாக்கி அவற்றை இறந்தவருடைய திருப்திக்காகவென்று சொல்லி வைத்து தெற்குமுகமாக இடமுழந்தாளை * ஊன்றி அப்பிண்டத்தில் அவரைப் பூசிக்க

தானம்—பின்பு இயன்ற அளவு அதிகமாக அவருக்குத் தானங்கள் 0 செய்க.

இது உருத்திரர்களுடைய வழிபாட்டுக்காகச் செய்யப்படுவது. சிராத்தத்துக்கு வந்தவரை அனுப்பியபின் பிண்டத்தைத் தண்ணீருக்குள் விட்டு ஸ்நானஞ்செய்து சாப்பிடுக. ‡

---

* இது விசேஷ மரியாதைபோலும். இது சிவபூசையிலுஞ் செய்யப்படுகிறது.

0 ஏகோதிட்டத்துக்குக் கொடுக்கப்படுந் தானங்கள் ஒருவனுடைய வாழ்க்கைக்கு வேண்டியவையாவுமாம். அவையாவன:—சாப்பாட்டுப்பொருள்கள், உடை, திருநீற்றுப்பை, செபமாலை, குடை, மிதியடி, பொன் முதலியவை.

‡ இப்படியே ஒவ்வொரு மாதத்திலும் றாற்பத்தைந்தாம்நாளிலும் ஆறும் மாதத்திலும் வருடச்சடைசியிலுஞ் செய்க.

## ௬. சபிண்டீகரணம். *

சபிண்டீகரணம் ஒரு ஆண்டு முடிவில் செய்யத்தக்கது. ஆயினும் அதற்கிடையில் நேரத்தக்க வசதியீனங்களை நினைத்து ஏகோதிட்டநாளுக்கு அடுத்த நாளிலே செய்யலாம். இதிலே நாலுபகுதிகளுண்டு. (க) சிவனடியார்களாகிய நந்திதேவருக்கும் மகாகாளருக்கும், § (உ) பிதுர்த்தேவர்களாகிய கந்தர், சண்டர், கணுதீசருக்கும், (ங) விருந்தாகவரும் அதிதி அப்பியாகதருக்கும், (ச) இறந்தவராகிய ஆன்மாவுக்கும் பூசைசெய்யப்படும். இறந்த ஆன்மாவுக்கு நிமித்தர் என்று பெயர். இந்த நாலுவகையாருடைய பூசையையும் ஏற்றுக்கொள்ள நால்வரேனும் இருவரேனும் வேண்டும். ‡ சபிண்டீகரணத்துக்கு வருபவர்களுக்குச் சகல உபசாரங்களுஞ்செய்து வீட்டிற்குள்ளே அழைத்துச்சென்று தர்ப்பையாசனத்திலேயிருத்துக. விசுவதேவர் அதிதி † அப்பியாகதர் ‖ கிழக்குமுகமாகவும் பிதுர்தேவர்கள் வடக்குமுகமாகவும் நிமித்தர் மேற்குமுகமாகவும் இருப்பர்.

அவர்கள்முன் பாத்திரங்களை வைத்துத் தேவபாத்திரங்களில் நெல்லும் பிதிர்பாத்திரத்தில் எள்ளுமிட்டு ஏகோதிட்டத்திற்போற பூசைசெய்து சபிண்டீகரண

---

* சபிண்டீகரணம் = ஒரேவடிவமாக்குதல். (பிண்டம் = வடிவம், பிதுர்வடிவம்.

§ இவர்களுக்கு விசுவதேவர் என்று பெயர்.

‡ ஒவ்வொரு பகுதிக்கொவ்வொருவராக நால்வர்; அல்லது பிதுர்வர்க்கத்தாருக்கொருவரும் விசுவதேவர்க்காக ஒருவருமாக இருவர். அல்லது ஒருவர்து புயங்களில் விசுவதேவரையும் தலையிலும் தோளுச்சியிலும் பிதுர்களையும் பூசிக்கலாம்.

† அதிதி = முன் அறியப்படாதவர்.

‖ அப்பியாகதர் = முன் அறியப்பட்டவர்.

சிராத்தம் செய்தற்கு உத்தரவுபெற்று வலதுபூணூலோடு விசுவதேவரைப் பூசிக்க. பின் பூணூலை இடமாக இட்டுப் பிதுர்த்தேவர்களைப் பூசித்து நிமித்தனை மூலமந்திரஞ் சேர்த்து இறந்தவருடைய தீட்சாநாமத்தோடு பூசித்து அதிதி அப்பியாகதர்களையும் பூசிக்க. சாதம் முதலியவற்றை நெய்யோடு சேர்த்து ஓமாக்கினியிலே பிதிர்களுக்கும் நிமித்தனுக்கும் ஆகுதி செய்க. பின் விசுவதேவர் முதலியோருக்குப் போசனங் கொடுக்க. சாப்பிடமாட்டாதவர்களாயின் அரிசிமுதலியவைகளும் தட்சணையுங்கொடுத்தனுப்புக.

சபிண்டீகரணம்—பின்பு அவர்களது முன்னிலையில் சாணியால் மெழுகித் தெற்குநுனியாகத் தர்ப்பைகளை வைத்து எள்ளுச் சிதறி சாதங் கறிகளை எள்ளுடன் சேர்த்து பிதிர்வர்க்கத்திற்கு மூன்றும் மாதுருவர்க்கத்திற்கு மூன்றும் நிமித்தருக்கு ஒன்றுமாக ஏழு பிண்டம் பிடித்துவைக்க. நிமித்த பிண்டத்தைப் பூசித்து மூன்று கண்டமாக்கி ஆணில் பிதுர்வர்க்கத்தில் ஒவ்வொன்றோடு சேர்க்க. பெண்ணில் மாதுருவர்க்கத்தோடு சேர்த்துப் பூசிக்க. இதனால் அந்த ஆன்மா பிதுர்தேவராகின்றது. பின்பு பிண்டத்தைத் தண்ணீரில் விடுக.

பிதுர்தேவர்களாகிய கந்த சண்ட கணதீசர்கள் சிவலோகத்திலுள்ளவர்கள். இறந்தவர்களுக்குள்ளே முதல் தலைமுறையோர்க்குரிய பூசை கந்ததேவருக்கும், இரண்டாந்தலைமுறையோர்க்குரியது சண்டதேவர்க்கும், மூன்றாந்தலைமுறையாரது கணதீசருக்குஞ் செய்யப்படும். அப்பூசைகளின் பலன் இறந்தவர்களுக்கு அவர்களால் சேர்க்கப்படும். இத்தலைமுறையார் அவ்வத்தேவர்களது சாரூபத்தைப் பெறத்தக்கவராதலாற்போலும் இவர்களைக் கந்தரூபர், சண்டரூபர், கணதீசரூபர் என்பர்.

## எ. வருஷசிராத்தங்கள். *

மற்றைய ஆண்டுகளிற் செய்யுஞ் சிராத்தங்களிலே, நிமித்தனை ஒழித்துக்கடைசிக்கிரியைத்தவிர்த்து, மற்றைய யாவுஞ் சபிண்டீகரணசிராத்தம்போற் செய்க. அவற்றின் முறை: சங்கற்பம், விநாயகபூசை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம், மூவகையினர்பூசை (விசுவதேவர், பிதுர்தேவர், அதிதி அப்பியாகதர்), பிண்டபூசை. சிராத்தங்கள் அவரவர் இறந்தநாட்களிலேயன்றி அமாவாசை வருஷப்பிறப்பு முதலிய சிறந்த நாட்களிலும், சிறந்த தீர்த்தம் சிறந்த கோயில்களை அடையும்போதும் செய்யத்தக்கது.


சங்கற்பவாக்கியம் எல்லாக்கிரியைக்கும் வேண்டியதாதலாலும், கிரியைசெய்பவரே சொல்லுவதவசியமாதலாலும், அதன் வடமொழிமுறையையுங் குறிப்பாம்:— சிவசம்போராஜ்ஞயா ப்ரவர்த்தமாநஸ்ய ஆத்யப்ரமணோ த்விதிய பரார்த்தே ஸ்வேதவராககல்பே வைவஸ்வத மந்வந்தரே அஷ்டாவிம்சதிதமே சதுர்யுகே கலியுகே ப்ரதமபாதே சம்புத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே மேரோர்தட்சிணே பார்ச்வே —— தேசே சகாப்தே அஸ்மிந் வ்யவகாரிகே பிரபவாதி ஷஷ்டி சம்வத்சராணும் மத்யே ——சம்வத்சரே—— அயநே —— ருதௌ —— மாசே——பட்சே —— திதௌ——வாரே—— நக்ஷத்ரே —— சிவயோக சிவகரண ஏவம்குண விசேஷேண விசிஷ்டாயாம் அஸ்யாம் புண்யதிதௌ—— —— அர்த்தம் —— —— —— கரிஷ்யே.

அகோரசிவாசாரியர் திருவடி வாழ்க.

முற்றிற்று.

---

* சிராத்தநாளைத் திவசமென்றுந் திதியென்றுஞ் சொல்லுவதுண்டு. திவசம் = நாள். முதலாண்டுமுடிவிற் செய்யப்படுவது ஆட்டைத்திவசமெனப்படுகின்றது. ஆண்டு + திவசம் = ஆட்டைத் திவசம். ஆண்டு — வருஷம்; ஐ சாரியை. சிவபூசை அல்லது சிவாலயசேவை சிராத்தங்களின்முன் செய்யவேண்டியது.



வாயு
விக்கின விநாயகர்
தேவி
பிரதிட்டை
சண்டீசர்
குபேரன்
சத்தகுரு
ஈசானன்
பிரமா
கசு, உஅ * யாகரட்சகர்
கஎ, உகூ 0 ஈசுவரி
வட்சுமி
வருணன்
கந்தர்
விவிர்த்தி
இடபதேவர்
நந்தி
சாந்தி
மகாகாளர்
இந்திரன்
மண்ட லேசுரர்
அக் கினி
குரு மாணாக்கன்
சூரியன்
விஷ்ணு
நிருதி
வாஸ்து
யமன்
விநாயகர்
வித்தை
பிருங்கி
அக்கினி

# அந்தியேட்டி மண்டபம்.

துவசம் கதை சூலம்

பதாகம்

சிவகும்பம்

யாகவர்த்தனி

பாசம்

அக்கினிகுண்டம்

வச்சிரம்

குபே